# செந்தமிழ்


| தொகுதி: | திருவள்ளுவர் ஆண்டு 2004 | பகுதி |
| --- | --- | --- |
| சு. அ. 68 | பிரமாதீச ஆனி. சூன் 1973 | உ. 2 |



1. ''பாண்டித்துரையார் மொழிப்பற்று'' ... 3
திருமிகு. சி. கோவிந்தராசனர்
பழம்பொருள் ஆராய்ச்சியாளர். தஞ்சை.
2. ''பாண்டித்துரையும் தமிழ்ச்சங்கமும்'' .... 12
திருமிகு. வி. சி. சீனிவாசன்.
செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.
3. ''பாண்டித்துரையார் நாட்டுப்பற்று'' ... 19
திருமிகு. கு. துரைராசு எம். ஏ.
தேவர்கல்லூரி, உசிலை.
4. ''பாண்டிவள்ளல்'' ... 23
கவியோகி சுத்தானந்தபாரதி சென்னை
5. ''யாண்டுங்காணேன் மாண்டக்கோனை'' ... 30
திருமிகு. கி. பொன்னுராமன், மதுரை.
6. ''கல்வெட்டில் ஓர் நிலையாமைத் தத்துவம்'' ... 33
திருமிகு. அ. இராசேந்திரன்,
பல்கலைக்கழகம், கேரளம்.
7. ''தமிழ்நூல்களுள் யானை–3'' .... 37
சு. சுவர்ணகாளீச்சுரன்
அரசர் கல்லூரி, திருவையாறு
8. ''நாலும் இரண்டும்'' ... 43
திருமிகு. பூ. சொல்விளங்கும்பெருமாள்
எம். ஏ., பி. டி.
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை.
9. ''தமிழ்க்கிளவி'' ... 59
திருமிகு. இரா. கோதண்டராமன் எம். ஏ.
(தமிழ்) எம். ஏ. (மொழியியல்)
அண்ணாமலை பல்கலைக்கழகம்
10. ''சங்கச் செய்திகள்'' ... 67
11. தமிழ்ச் சங்க நுழைவு, இளம்புலவர்,
புலவர் தேர்வு முடிவுகள் ... 73

# "பாண்டித்துரையார் மொழிப்பற்று"

புலவர் திருமிகு, சி. கோவிந்தராசனார் அவர்கள்,
பழம் பொருள் ஆராய்ச்சியாளர், கரந்தை.

தலைவர் அவர்களே! செல்லத்தேவர் அவர்களே ஆண்டியப்பத்தேவர் அவர்களே! உங்களுடைய சிறந்த செயலை நினைந்து தொடங்குகிறேன். எனக்கு அளித்த தலைப்பு "பாண்டித் துரையார் மொழிப்பற்று" ஆகும். வெள்ளையர்கள் இந்நாட்டைக் கைப்பற்றி ஆங்கிலேய ஆட்சி தொடங்கிய காலம் ஏறத்தாழ 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்றே கொள்ளலாம், அந்தக் காலத்தில் இந்தியமன்னர்களாகவும், அல்லது பாளையக்காரர் களாகவும், ஏதோ ஒரு வகையில் அவுல்தாரர்களாகவும் செல் வர்களாகவும் இருந்ததால், அவர்கள் வீட்டில் குழந்தை பிறந் தால் என்ன செய்தார்சள் தெரியுமா? ஆங்கிலேயர் மதிக்க வேண்டும் என்ற கருத்துடனே; ஆங்கிலக் கல்வியைக் கற்க வைத்து ஆங்கில உடைகளிலே அவர்களுக்கு அழகு செய்தார். அவர்களே பொது மக்களையும் அவ்வாறே ஆக்கிப், பொய்யான ஒன்றைப்பற்றி வாழ்ந்த காலமது. அந்தக்காலத்தில் பொன்னுச் சாமித்தேவர் அவர்கள் தம்முடைய பிள்ளையைத் தமிழ் மொழியில் தமிழ்க் குடிமுறையை ஆக்கிப்படிக்க வைத்து மேற்கல்விக்குப் படிக்க வைக்க முயற்சி செய்தாரேனும், தமிழ்ப் புலவர்களுடைய நலங்கண்டு, அவர்கள் தமிழ் கண்டு, தமிழ்ச் சிறப்புக் கண்டு மேன்மையுற வேண்டும் என்று கருதினாரே அது அல்லவோ தமிழ்ப்பற்று. தமிழ்ப்பற்று அத்தந்தைக்கு இருக்கிறதென்றால் மகனுக்கும் இருப்பதில் வியப்பொன்றும் இல்லை எனவே "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்"

என்ற வள்ளுவரின் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக, ஒரு சான்றாகப் பொன்னுச்சாமித் தேவர் அவர்கள் இருந்ததைப் போற்ற வேண்டும். ஆக்கித்தருபவர் களுடைய செயலும் எண்ணமும் உருப்பெறுமானால் நின்று செயலாற்றிப்புகழ்பெறும். அங்குதான் உண்மைநிலை இருக்கிறது

தலைவர் அவர்கள் பாண்டித்துரைத்தேவர் அவர்களுடைய செயலை நன்றாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டுக்குப் பாடுபடுபவரும், மேலும் தமிழர்களைப்பற்றிச் சிந்தித்துக் கவலை கொள்பவரும் இருப்பார்களானால் அவர், ஐயா தான் இது உண்மை நிலைதான். இன்று சொன்னதுகூட அவரின் உள்ளத்தின் குமுறலிலே எழுகின்ற கருத்துத்தான். உள்ளத்திலே ஆர்வம் எழுதலால் அது செயற்படும் அந்நிலையில்தான் தன்பிள்ளையை உயர்நிலைப்பள்ளிக் கல்வி கற்கின்ற காலத்திலேயே சிறந்த புலவர்களிடத்திலே கம்பராமாயணச் செய்யுட்களைச் சொல்லச் செய்து. அதன் பொருள்களை அறிவுத்திறனை அறியச் செய்த பெருமை பொன்னுச்சாமித்தேவர் அவர்களைச் சாறும், ஏனென்றால் அப்போது மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையினுடைய மாணாக்கராக இருந்த பெரியவர்களுள்ளே, இன்று இருக்கின்ற மாணாக்கர் போலல்ல; சங்ககால மாண்புப்படி "இருவென இருந்து சொல்லெனச் சொல்லி" என்று இருந்து பாடம் கேட்ட காலம், அந்தவகையில் தம்மகனை இருந்து பாடம் கேட்கச் செய்தார் என்று அறிகிறேன்,

பிள்ளையவர்கள் மாணாக்கன் பட்டீசுவரம் அரங்கசாமி செட்டியார் பாடலைக் கேட்கநேர்ந்தது தந்தையாருடைய விருப்பப்படிதான். அந்நிலையில் தேவர் அவர்களுடைய தமிழ்ச்சங்கத்தினது தோற்றத்திற்கு அவர்கள் வந்திருந்த செய்கை நினைவுக்கு வருகிறது. அதெல்லாம் நினைக்கும்பொழுது தான் இந்தச்சங்கம் எந்த முறையில் உருவானது என்று தெரிகிறது ஐயா அவர்கள் தான்' ஓரளவு தொல்காப்பியத்தை இன்றைக்கு 2200 ஆண்டுக்கு முன்பு கொண்டு சென்றார்கள் நான் படிக்கும்போது அவர்களது தமிழ் ஆராய்ச்சி மொழியிலே எனக்கு மகிழ்ச்சி உண்டு. நம் தமிழர்களுக்கு ஒரே எண்ணம், சிலஇடங்களில் இந்தப்பாமர மக்கள் வணிகம், செய்கின்றபோது எந்தப்பொருளும் எடுத்தால் இரண்டுரூபாய். இரண்டுரூபாய் என்பான் 'மூன்று ரூபாய்' என்று சொல்லவும் வராது 2-3/4 ரூபாய்என்று சொல்லவும் வராது, ஆனால்இரண்டு ரூபாயுக்குச் சொன்ன பொருளை விற்பான். அதன் உண்மை நயம் மக்களின் நிலையைப் புரிந்துசொன்ன பெருமை ஐயாவைச் சாரும் அதை ஐயா அவர்வள் இப்போதும் கூறவேண்டும் என்பதென்னது ஆசை

தொல்காப்பியத்திலே ஒரு தலைவியைக் கண்ட தலைவன் அங்கே கைக்கிளை என்ற குறியீடுகளை இலக்கண முறையிலே இருந்தது. அறிவியல் துறையிலே சிறந்து விளங்குவதற்கு எத்தனை ஆயிரம் ஆண்டுகள் வேண்டும். அப்படி வளர்ந்த காலத்து உலகச் சூழ்நிலையிலே வளர்ந்த சமுதாயங்களில் இந்த பண்பாடு இருந்ததா? ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும், உண்மை காண வேண்டும். அப்படியானல் 'மண்ணில் தோன்றிய மூத்த குடி இது' என்றதில் என்ன தவறு! யார் மறுக்கக்கூடும்?

தேவரவர்கள் அறிவு ஒளி கொண்டு வரலாற்றிலே திகழ்ந்தார்கள் என்பதை அறிகின்ருேம் நல்லமுறையில் நாகையிலே பேசியிருக்கின்ருர்கள். குடந்தையில் பேசியிருக்கின்ருர்கள் . தஞ்சையில், திருச்சியில் ஒருநாள், மதுரையிலே பல நாள். திருநெல்வேலியிலே சைவசித்தாந்த சபையில் பலதிங்கள்கள் பேசியிருக்கிருர்கள். அப்படிப்பட்ட நல்ல பேச்சாளராக இருந்த அவர்கள் மதுரையிலே தாம்விரும்பிய ஒரு சொற்பொழிவிற்கு அவர்காலத்திலே சில நினைவுகளுக்குச் சென்று தேடுகின்ற முறையில் கம்பராமாயணத்தையும் திருக்குறளையும் விரும்பிய காலத்து அதையாண்டும் ஆசிரியர்களிடத்தும் தேடியும் அகப்படாத நிலையிலே, புது மண்டபத்திலே இலக்கியப் பேச்சின் வேதனையின் காரணமாக எழுந்தது இந்தத் தமிழ்ச்சங்கம்.

அப்போது மாநில அரசியல் மாநாடு 1901 மே மாதம் 21, 22 தேதியில் நடைபெற்றது சிந்தனை யெல்லாம் இதற்கு 'என்ன வழி செய்ய வேண்டும்' என்றுதான் இருந்தது என்பதை நான் கருதமுடிகிறது, அதன் நிலையாக சான்ருேர்களைக் கூட்டி ஆராய்ந்து செப்டம்பர் திங்கள் 14-ஆம் நாள் இச்சங்கத்தை மிக விருப்புக்கொண்டு தோற்றுவித்தார்கள் இதற்கிடையில் அவர்கள் செய்த காரியத்தை நான் புலவர் அரங்கசாமி செட்டியார். அவர்களிடத்திலே கேட்டேன், அவர்கள் சொன்ஞர்கள், எல்லோருக்கும் அழைப்பு, வந்ததாம், அழைப்பு பாண்டித்துரைத்தேவர்களுடைய கைப்பட எழுதிய அழைப்பு கொஞ்சம் தடுக்கலான காரியம் இருந்தது என்று சொன்ஞர்கள். அதைச் சொல்லுகின்றபோது சங்ககாலத்து ஏடுகள் ஏதேனும் இருக்குமானல், அதைமறவாமல் எடுத்துவருவீர்களா

ஞல், அதனை நாங்கள் பிரதிசெய்துகொண்டு உங்களிடம் உடனே ஒப்புவித்துவிடுவோம். தங்கள் மனமறிந்ததாக இருப்பதாயின் தங்களின் பெயரால் சங்கத்தின் பொறுப்பை இதில் இணைத்துக் கொள்வது 'என்று எழுதியிருந்தார்களாம். செயலாற்றுகின்ற போதே அடிப்படைக்கு வேண்டிய அத்துணையும் சேர்ப்பது என்பது தமிழ்ப்பற்ரு? வேரு?

விளம்பரத்திற்காக என்னவெல்லாமோ பிறர் செய்கின்ருர்கள்! அப்படி இல்லாது, எண்ணித்துணிந்து எழுந்த, தமிழ்ச் சங்கத்தோற்றமானது பேரளவு கொண்ட உழைப்பே தவிர, வேறல்ல. இதுதான் உண்மையான தமிழ்ச்சங்கம், அதைத்தான் ஐயா அவர்கள் வருத்தத்தோடு சொன்ஞர்கள். அதன் அவையவமான அதன் அங்கங்கள் முடம்பெற்றுக்கிடக்கின்றன என்று.

தமிழச்சங்கத்தைத் தோற்றுவித்த அவர்கள், நூல்களையெல்லாம் ஒன்றுதிரட்டினுர்கள். சீனிவாச ஐயங்கார் போன்றவர்களெல்லாம் இக்கட்டிடத்தில் கூடினுர்கள். புலவர்களையெல்லாங் கண்டபோது கைநீட்டி வரவேற்றுப் பாதுகாத்ததினுலே, நல்ல இலக்கியங்களை இருபதாம்நூற்ருண்டிலே காண முடிகிறது. இதைக்கொண்டுதான் சங்க காலத்தை அறிகிருேம். புலவர்களை ஏற்ருர்கள் புலவர்களை மட்டுமா? தமிழ் நாடெங்கும் கிடந்த ஏடுகளை யெல்லாம் கொண்டு வந்து சேர்த்தார்கள். புலவர்கள் சேர்ந்தார்கள், சங்கம் தொடங்கியது ஆராய்ச்சியிலே மூழ்கினுர். இராமநாதபுரத்தில் எப்போதும் கம்பராமாயண ஆராய்ச்சி செய்வார்களாம், அதைப் புலவர்களைக் கொண்டு பாடச்செய்து மகிழும்போது, அந்தோ! இதைத்தமிழ்மக்களெல்லாம் கேட்டு மகிழ வேண்டும் என்று சொல்வார்களாம், எனவே தான் சண்முகத்திரட்டு'த் தோன்றியது.

எனவே தமிழ், தமிழ்நாடு சிறக்கவேண்டும் என்பதிலேயே அவர்கள் எண்ணம் இருந்தது. சங்கம் மட்டும் இருந்தால் எல்லோரும் வந்து தெரிந்து கொள்ள முடியாது' என நினைந்து நல்ல கருத்துக்களையும், ஆராய்ச்சியையும் கொண்ட 'செந்தமிழ்' என்னும் இதழைத் தொடங்கி எல்லோரையும் அறியச்செய்தார்.

அவர் கொண்ட பற்றுக்கு இது இலக்கணமாக அமைந்தது. பழைய வரலாறுகளைப் பாருங்கள் 'செந்தமிழ்ப்பாண்டி' என்று சான்று காட்டியிருக்கும் இதிலிருந்து அதன்பெருமை, மதிப்பீடு என்னஎன்பதை எல்லோரும் அறிவீர்கள். 'கல்வெட்டு' என்பதை வெளியிட நினைத்தார் கோபிநாதய்யர் ஒன்ற கல்வெட்டுப் புலவர். அவர் செந்தமிழுக்கு எழுதிய காலத்திலேயே. விருப்போடு ஏற்று வெளியிட விரும்பினார்களாம். விரும்பிய காலத்தில் கோபி நாதய்யர் குறிப்பிலே எழுதியிருக்கின்றார், 'ஐயா' நீங்கள் யாருக்கு விளங்காத ஒன்று என்று விரும்பியும் படிக்காத ஒரு நிலை' இதை நீங்கள் விரும்பிச் செய்வது குறித்து எனது வந்தனம்' என்று. இதையும் பதிப்பித்து ஒரு தமிழ் ஆராய்ச்சியாளரின் கருத்தையும் மாற்றாமல் போட வேண்டும் என்று நினைத்தார்கள் என்றால், இது தமிழ்ப்பற்று இல்லாமல் வேறு என்ன இருக்க முடியும்.

அடுத்த சிறப்பான தொண்டு எது? என்று சொல்வோமானால் இந்தத் தமிழ்ச்சங்கத்தில் தமிழ்க்கல்லூரியை ஏற்படுத்தி வைத்ததுதான் இப்போது ஆரம்பப்பள்ளி முதல் உயர்நிலைப் பள்ளிவரை நமது தமிழுக்கு நல்ல தகுதி இல்லை என்பதைக் கேள்விப்படுகிறேன். காரணம் எங்கள் படிப்புக் காலத்தில் தகுதி பெற்று வந்து விட்டது. இப்போது. மாணவர்கள் தமிழ் என்றால் சிறப்பாகக் கருதுவது இல்லை. அப்போது பாடஞ் சொன்னபுலவர் தகுதி வாய்ந்தவர், ஊதியம் 15 ரூபாய், இவ்வளவு தான் அக்காலத்திய நிலை. ஆரம்பநிலையே தமிழ் என்று நினைத்தார்கள் நன்றாக இருந்தது.

நாராயண ஐயங்கார் கல்லூரிக்குப் புலவராக இருந்தவர். ஐயங்கார் அவர்கள், ஆராய்ச்சிக் கருத்து பழமையாக எழுதியிருக்கிறார்கள். அப்போது கல்லூரியில் இடைநிலையாகவும், பிரவேசம்,பாலபண்டிதம்,பண்டிதம்என்று வகுப்புக்களை உருவாக்கி தமிழகத்தினைப் பழைய புலமை நிலையில் தகுதி பெற்றதாக ஏற்படுத்தினார்கள், இது தமிழ்ப் பற்றால்தான், தமிழுக்கு ஒரு நல்ல நிலைவரவேண்டும் என்ற விருப்பத்தினால்தான், சென்னைப் பல்கலைக்கழகமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் தனிப்பாடப் புத்தகங்களையும் ஏற்படுத்தியது, இச்சங்கத்தின துஆவலாலேயே

தான் என்று அறிவேன். B. O. L, M. O. L என்பவையெல்லாம் அதற்காகத்தான் தோற்றுவித்தார்கள் அவற்றிற்கெல்லாம் அடிப்படை சங்கந்தான் தமிழ்ச்சங்கத்தைப் பாண்டித்துரையவர்கள் ஆரம்பித்தார்களே, அது வெறும் சொற்பொழிவுக் கூடமல்ல. ஒரு நல்ல, தமிழ் ஆராய்ச்சிக்கூடம்.

தமிழ்ப்புலவர்கள் யாண்டும்வந்து இளைப்பாறிப் புலமையை வளர்த்து விரிவு செய்கின்ற இடம். அவற்றையெல்லாம் வெளியிட வெளியேசென்றுஏமாந்து நிற்கவேண்டாம் என்று நினைத்து 'பாண்டியன் அச்சகம்' என்றஅச்சுக்கூடம் அமைத்துத்தொண்டு செய்த இடம், செயல்பட்ச் செய்தஇடம். அதுமட்டுமல்ல எல்லாவற்றையும் தேர்ந்து கற்று அத்துறையிலேயே தமிழ்நாடு எங்கணும் இங்கே ஒரு ஊனமாக இருக்கின்ற ஒருசிலத்தில் பயிரிட வல்லார் புறப்பட்டுச் சென்று நல்ல பயிராக விளைவிக்க வேண்டிப் பாடுபடுகிறார்களோ, அதுபோல நல்ல புலவர்களாக ஆங்காங்கே இருந்து, உயர்நிலைப் பள்ளிகளிலும், பிற இடங்களிலும், தமிழ் வளர்தற்குச் செய்தஇடம். இத்தனை முறைகளிலேயும் கையாளுகின்ற முறையில்தான் தமிழ்வளரும் என்று சிந்தித்துச் செய்தார்கள் என்றால் அவர்களின் உண்மையான தமிழ்ப்பற்றுள்ளத்தின் காரணந்தான்.

அதுமட்டுமல்ல மற்றொரு நிகழ்ச்சியைப் பாடல்களிலெல்லாம் பார்த்திருப்பீர்கள், நான் சொல்வது நினைவு தான். ஒரு புலவர் திருக்குறளைத் திருத்தியதை' தாம் விரும்பியதை எல்லோரும் விரும்புவார்கள் என்ற உள்ளத்தோடு வந்து தேவரவர்களிடத்திலேயும் சொன்ன பொழுது, உயர்ந்தவராகையால் வெளிக்காட்டாது. தமிழுக்கு இத்தகையதோர் இழுக்கினை, தவறுடைய பாடல்களை மக்கள் படிப்பாராயின் தவறு நேருமே என்று வருந்திய உள்ளத்தோடு அவர் கொண்டு வந்தபிரதிகளையும் பிறவற்றையும் வாங்கிவைத்துப் பிழையுள்ளதை வெளிக்காட்டாது அழித்தார்கள் என்றால், அது தமிழ்ப் பற்றல்லாமல் வேறுஎன்ன இருக்கமுடியும் தமிழுக்கு என்னயென்ன முறையில் செய்தால் நல்லபடி உருவாகும் என்ற நிலையிலே செயல்பட்டிருக்கின்றார்கள்

அச்சகம் என்பது பொறியியல் துறை, அந்தப் பொறியியல் துறையிலே இருக்கின்றவர்கள் அதிகக் கல்வியுடையவர்களாக இருப்பதை இன்றுகூடக் காணமுடியவில்லை. கல்வியுள்ள சுப்பிரமணியகவிராயர் என்பவரை அச்சகத்திற்கு நியமித்திருந்தார் என்றால் அந்தத் தமிழ்ப்பற்று அச்சகத்திலும்கூட நடனமாடியிருக்கிறது,

புலவர்கல்லூரிக்கு அரசஞ்சண்முகனார் ஆய்வுக்குநாராயண ஐயங்கார் ஆகியோரை நியமித்திருந்தார், அவர்களை அன்போடு வணங்குவது தமிழ்ப் பெரியவர்கள் என்பதனால் தான். சைவ சித்தாந்த நூல்களை ஐயந்திரிபறக் கற்றவர் பெரியவர். அவர் சிவஞானமுனிவரை ஞானநூற் குருவாகக்கொண்டதைத் தாம் இயற்றிய ஒருநூலில் வெளியிட்டிருப்பதாக அறிகின்றோம். முருகனிடத்திலும் பக்திகொண்டவர் என்பதையும் அவருடைய காவடிச்சிந்து கூறுகின்றது. இவ்வளவு பெருமை கொண்டவர் ஆசிரியவர்களிடத்தில் அன்புகொண்டார் என்றால் அது தமிழ்ப் பற்றால்தான். எனவேதான் தேவரவர்கள் வளர்த்த இந்தத் தமிழ்ச்சங்கம் நாளும் வளர்ச்சியடைய வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இருந்திருக்க வேண்டும். இடையில் இது சில இடையூறுகளுக்குப்பின், மீண்டும் இப்போது புத்துயிர் பெற்று நல்ல வளர்ச்சி பெற்று வருவதாக அறிகின்றோம். நல்லபடியாக வளர்ந்து செல்லவும், நன்மைகளோடு செல்லவும் அதற்கு ஃ செல்லத்தேவர் அவர்கள் தான் தக்கசெயலாற்ற வேண்டும் என்பதைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நல்லவாழ்க்கையே அனுபவிக்கவேண்டிய பாண்டித்துரை அவர்கள் அதைவிடுத்து தமிழுக்காகப் பாடுபட்டவர் உடல் பொருள் ஆவி என்பார்களே அந்த மூன்றையும் கொடுத்து தமிழ் வளர்த்திருக்கின்றார் தேவரவர்கள். அவருக்கு இந்தமதுரையிலே ஐயா சொன்னதைப்போல தமிழ்ச்சங்க வாயிலிலாவது ஒருசிலை வேண்டாமா? நேற்றுக் கந்தசாமிப் புலவரவர்கள் சொன்னார்களாம் 'பொன்னால் சிலைசெய்ய வேண்டும்' என்று இது இவர்களுடைய தமிழ்ப்பற்று. இந்த நூற்றாண்டு விழாவிலேயே சொன்னேன். அது ஓரளவுக்குப் பெரியவர்களின் சிந்தனைக்கு வந்திருக்கிறதென்றே நினைக்கின்றேன். இது பெரிய செயலல்ல!

நரம் நினைத்தால் சிலநாட்களிலே சிலை தமிழ்ச் சங்கத்தின் வாயிலிலே வந்துவிடும் யாரோ ஒருவர் தரவேண்டுமென்பதல்ல ஆனால் தரலாம் எத்தனையோபேர் 'இலைமறைகாய்போல' இன்று வள்ளல்களாய் இருக்கின்றனர். என் பெயரால் வேண்டாமய்யா!' இதைக் கொண்டு வள்ளல் பாண்டித்துரைச்சாமி அவர்களுக்குச் சிலைநிறுவுங்கள்' எனச் சொல்லலாம். சொன்னால்அதை அன்போடேற்றுச் செய்ய ஆண்டியப்பத் தேவர். செல்லத்தேவரவர்கள் செல்லமாகப் போற்ற இருக்கின்றார் இந்தநிலை இருக்கும்போதே செயலாக்கப்படவேண்டும் இதற்குப்பொருளை எல்லோரும் பேராசிரியர், சான்றோர், பெரியவர்கள் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். எனவே இந்நான்காம் தமிழ்ச்சங்கம் பேரும்புகழுடன் வளர்ந்து முன்னைய தமிழ்ச்சங்கம் இப்படித்தான் இருந்ததோ! என்ற அளவுக்கு வளரச் செய்ய வேண்டும் இதுதமிழ் உள்ளளவும், உலகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும் என்பது உறுதி.

எனவே பாண்டித்துரை யவர்களின் சிலையை வைத்தால் அது தமிழின் புகழைச், சிறப்பை, அவர்களின் தொண்டினைப் புலப்படுத்தும் அளவாக என்றும் இருக்கும். எனவே இந்த 20 – ஆம் நூற்றாண்டின் அவருடைய செயலுக்கு, இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலாவது ஏற்படுத்திச் செய்யவேண்டும். பாண்டித்துரையவர்கள் சங்கத்தை 1901-ஆம் ஆண்டு தொடங்கினார்கள். இந்த இருபதாம் நூற்றாண்டின்தொடக்கமே தமிழுக்கு ஒருஆக்கமாக இருந்திருக்கின்றது. 1919ம் ஆண்டு இயற்கை எய்தியிருக்கிறார்கள் அந்தோ! என்ன செய்வது ஒருகால் அவர்கள் சிந்தை எங்கிருக்குமோ என்று எண்ணுகின்றேன். அடுத்து வருவது 20 பத்தொன்பது எப்படியோ ஆங்கிலேயர்களுடைய ஆட்சியில் பாழாய்ப் போனது. இருபதில் ஒருஅளவுக்கு என்றால் தமிழுக்கு செயல் இருந்தது என்பதை நிலைநாட்டுவதற்காகவோ? என்னவோ! 1919-தோடு மறைந்தார்கள்.

எனவே பெரியோர்களே! அவர் செய்த தமிழ்த் தொண்டுக்காவது அவருக்குச் சிலை வைத்து வழிபட வேண்டும். இது அவருக்குச் செய்த நன்றிக்கடனாகும்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்பது குறள்"

நாம் நினைக்க வேண்டும். தமிழை நினைத்த பாண்டித்துரை பெயரிட்டு அழைத்தால் என்ன.

'பிள்ளை' என்று சொல்வார்கள் அது மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்தள் தான், 'ஐயர்' என்று சொல்வார்கள் அது உ. வே. சாமிநாதய்யர் தான், அதுபோல 'தேவர்' என்றால் தமிழ்காத்த, தமிழ்வளர்த்த 'பாண்டித்துரைச்சாமித் தேவர்' அவர்கள் தான் மக்களிலே செயற்கரிய செய்த பெரியவராயிற்றே. இலக்கணம் ஐந்தினாலே சாதன சாத்திய முறையினாலே மக்களாய்ப் பிறந்த ஏற்றமாம் செயற்கரியசெயலைச்செய்தார்கள். தேவர்ஒப்பரன்றோ அது குறித்தாவது தேவரென்று இருக்கட்டுமே அதனால் தேவர் என்றாலே பாண்டித்துரை தான் அவ்வாறே இருக்கலாம் 'ஐயர்' என்றால் உ. வே. சாமிநாதய்யர் தான் 'பிள்ளை' யென்றால் 4 நாழிகையில் மங்காப்புகழ் பிள்ளைத்தமிழ பாடிமுடித்தார் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள். அப்படிப் பட்டவரைத்தான் சொல்லுகிறோம் பிள்ளையென்றால் மீனாட்சிசுந்தரம் பிள்ளையென்று. பாண்டித்துரையார் என்றே போட்டு விட்டோம் பிறகு சிறு பிள்ளைகளுக்குப் பாண்டித்துரை யார்? என்றே தெரியவராது எனவே தேவர் என்று குறித்தால்தான், அவர் பெயர் தனித்து நின்று மற்றவர்களைப் பிரித்துக்காட்டி நிற்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் தேவர் என்றால் குலத்தையன்றி தமிழ்வளர்த்த தேவர் என்றே ஆகும்.

வரலாறுகளிலே பாருங்கள் 'ஐயர்' என்றே குறிப்பிடுவார்கள். 'பிள்ளை'யென்றே குறிப்பிடுவார்கள். அதனால் சொல்லுகின்றேன் 'தேவர்' என்பதைக் குறைக்கவேண்டாம் இது தான் எனது வேண்டுகோள். செல்லத்தேவர் அவர்கள் சிறப்பான பணியாற்றக் கேட்டுக்கொள்கிறேன்.

# "பாண்டித்துரையும் தமிழ்ச்சங்கமும்"

திருமிகு புலவர் வி. சி. சீனிவாசன்,
பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

அறிவுசால் தலைவர் டாக்டர்ஐயா அவர்களே!
அன்புசால் சங்கத்துணைத் தலைவர்ஐயா அவர்களே!
செந்தமிழ்த் தொண்டர் ஆண்டியப்பனுர் அவர்களே!
பெரியோர்களே! தாய்மார்களே! வணக்கம்.

பண்டு போல் தமிழ்மொழி மேன்மையுற்றோங்க, அருங் கலைகள் புலமூண்டு தமிழ் அன்னை அரியாசனம் ஏறிக் கொலு வீற்றிருக்க அரும் பணிகள் பல செய்த செயல் வீரர், தமிழ் வள்ளல், பெருமேதை பாவலர் பாண்டித்துரைச்சாமித்தேவரின் 105 - வது ஆண்டு விழா நேற்றும் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இம்மாபெரும் தமிழ் விழாவில் மதுரை மாநகர மக்கள் வெள்ளம் போல் திரண்டு வந்து இங்குக் குழுமி இருக்க வேண்டாவோ? முச்சங்கம் தோன்றி முத்தமிழ் முழங்கிய மதுரை மாநகரன்றோ இது? தமிழும் தமிழ் மரபும் நிலைபெற்ற மகிழ்ச்சிக்குரிய மதுரை மாநகரன்றோ? என்று நாம் எல்லாம் பல வினாக்களை எழுப்பி வருந்திக் கொண்டிருக்கும் வேளையில், நமது தலைவர் டாக்டர் ஐயா அவர்கள் பொருத்தமான காரணம் ஒன்று கூறினர்கள்.

வள்ளல் பாண்டித்துரைச்சாமித் தேவரவர்களின் நயமிகு அரும் பணிகளை எல்லாம் மதுரை மாநகருக்கு விளக்கியிருக்கின்றோமா? நமதேவரவர்களின் உயரிய நோக்கத்தை உன்னதக் குறிக்கோள்களை மக்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றோமா? தமிழ்த் தொண்டர் ஆண்டியப்பனுர் அவர்கள் வள்ளலுக்கு நூற்றாண்டு விழா முன்பு நடத்தியுள்ளார்கள்; இப்போதும் அவர் இன்றேல் இவ்விழா இல்லை. இந்த அளவு தமிழ்ச் சங்கம் இன்று தமிழ்த் தொண்டு செய்கிறது என்றால் துணைத்தலைவர்

வழக்கறிஞர் செல்லத்தேவர் ஐயா அவர்களும்; இன்றைய ஆட்சிக்குழுவினரும்தான் காரணமாவர்; அவர்களை நாம் நாவாரப் பாராட்ட வேண்டும் வாயாரப் புகழ வேண்டும்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று தமிழ் மொழியின் பண்டைய மேன்மையைப் புகழ்ந்து பாடிய புரட்சிக் கவிஞர் பாரதியார், 'பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு நாமமது தமிழரெனக் கொண்டு வாழ்கின்றோம்' எனத் தமிழ் மக்களின் இன்றைய தாழ் நிலைக்கு வருந்திப் பாடினார். 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர், என ஆணையும் தந்தார்.

இருப்பினும் என்! தமிழறிஞர் எட்டுத்திக்கும் சென்றனரா? கலையறிவைக் கொண்டுவந்து நூலாக்கித் தமிழ் அன்னைக்கு அணிவித்தார்களா? இன்றளவும் இல்லையே. 'இறவாத புகழுடைய புதுநூல் இயற்றிடவும் வேண்டும்' என்றந்தப் புரட்சிக்கவிஞர் சொன்னாரே! செய்தோமா? 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் ஒருமகிமையில்லை' என்று நம்மை எல்லாம் இடித்துரைத்தாரே; அந்த இடிப்புரை நமது உள்ளத்தில் உணர்ச்சியில் தைத்ததா? இல்லையே 'ஊமையராய், செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்றோம்' என்று அந்தக் கவிஞர் கூறியதைத்தான் உண்மை யாக்கினோம். இத்தகைய எண்ணங்கள் தாம் இளவலாயிருந்த பாண்டித்துரை உள்ளத்தில் அலைமோதின. தமிழ்மொழி பண்டேபோல் தழைத்து ஓங்க வழிகள் யாதெனச் சிந்திக்கலானார். அவரது சிந்தனையையும் செயலையும் இம்மதுரை மக்கள் அறிந்திருந்தால் உறுதியாகச் சொல்வேன் மக்கள் அலைகடலென இங்குக் கூடியிருப்பார்கள்.

அதன்பின் அவன் வழி வந்த புதுமையும் புரட்சியும் பொலிவுறப் பாடிய கவிஞன் பாரதிதாசன்,

"எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம் குறை களைந்தோமில்லை"

என்று குறை பட்டுக் கொண்டான்.

"தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்'

என அன்போடு அழைத்துப் பார்த்தார். மறைமலை அடிகள் தனித்தமிழ் இயக்கத்தை வளர்த்தார். தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்கள் எளிய இனிய நடையில் தமிழ் நூல்கள் பல எழுதினர். பேரறிஞர் அண்ணு அவர்கள் மேடைகளில், நாடகங் களில், திரையரங்கில், பாமரர் வழக்கில், செய்தித்தாளில், அரசி யலில் நல்ல தமிழை நடமாடச் செய்தார்.

ஆயினும் என்? அவ்வறிஞர் கண்ட கனவு நனவாயிற்ரு? செயல் உருவம் பெற்றதா? தமிழ் மொழி சீர்நிலை அடைந்ததா? ஆங்கிலத்தில் திகழும் கலைகள் அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவை பற்றிய நூல்கள் தமிழில் எழுதப் பெற்றனவா? ஆங்கில மொழி வளர்ச்சியில் பாதி அளவாவது தமிழ் வளர்ந் துள்ளதா? தமிழ் அன்னைக்குப்பின் பிறந்த வங்காளி, இந்தி, மலையாளி ஆகிய மொழிகளில் கூட இன்று, பலதுறை அறிவியல் நூல்கள், அரசியல் தத்துவ இயல் நூல்கள் எழுந்துள்ளனவாம், அந்த அளவேனும் தமிழில் கலை வளர்ச்சி இன்னும் இல்லை, இல்லை, இல்லை. இத்தகைய இழிநிலை தமிழ் அன்னைக்கு உண்டா னது ஏன்? தமிழ் மக்கள் வாய்ச் சொல்லில் வீரர்களாய்த் திகழ்ந்தமை தான். இன்று நாம் வருந்தி யாது பயன்?

பேரன்புடையீர்! இவ் விழிநிலையைப் போக்கத்தான் தமிழன்னையின் தவப்புதல்வராம் செயல்விரர் பாண்டித்துரைத் தேவர் தோன்றினர். சேதுபதி மன்னர் மரபில் தமிழ்ப்புலவர் களுக்கு வரிசை வரிசையாகப் பரிசுகள் நல்கியவள்ளல் பொன்னுச் சாமித் தேவரின் திருக்குமரனுய்த் தோன்றினர்.

தந்தையாரிடம் தமிழ்ப் புலவர்கள் சீட்டுக்கவி பாடிப் பரிசுகள் பெற்று வீட்டிற்குச் செல்லும் காட்சியை நாள்தோறும் கண்ட இளவல் பாண்டித்துரையாருக்கு ஓர் ஐயம் தோன்றியது. பரிசளிக்கும் தொண்டால் மட்டும் தமிழ் வளருமா? ஆங்கிலத்திற்கு யாகத் திகழுமா?- என்ற வினு அவர் உள்ளத்தைக் குடைந்தது.

முதற்சங்க காலத்தில், கல்தோன்றி மண் தோன்ருக் காலத்தில்; ஆங்கிலேயர், ஆரியர் முதலிய மக்கள் காடுகளில் நாடோடிகளாய்த் திரிந்த காலத்தில், நம் தாய்மொழி அருந்தமிழாகக் கலைகளோடியைந்த இருந்தமிழாக விளங்கியதே! இவ்வுலகில் ஈடு இணையில்லா மொழியாகத் தமிழ்மொழி நாகரீகவளர்ச்சி பெற்று முடிசூடி வாழ்ந்ததே! என்பதைக் கற்றுணர்ந்தார், ஆராய்ந்து அறிந்தார் நமது பாணடித்துரைத்தேவர். பழந்தமிழ் நாட்டு வரலாற்றையும், பண்டைத் தமிழ் மொழியின் அருமை பெருமைகளையும் மக்களுக்குத் தெளிவாக உணர்த்த வேண்டும் என விரும்பினர்.

வெறுந் தமிழை அருந்தமிழ் ஆக்கவேண்டும், பஞ்சபூதத்தின் நுட்பங்கள் கூறும் புதுப்புது நூல்களைத் தமிழ்மொழியில் படைக்கவேண்டும்; அறிவியல் நூல்கள் பெருகவேண்டும். அரிய கலைகள் தமிழில் வளர வேண்டும். என்ற எண்ணங்கள் அவர் உள்ளத்தில் எழுந்தன! அதற்கு என்ன செய்யலாம் என ஆழ்ந்து சிந்திக்கலாஞர், அதுவே அவர் வாழ்வின் குறிக்கோள் ஆகியது நமது தேவர் ஐயா அவர்கள் மதுரையில் சொற்பொழிவாற்ற எண்ணியபோது, திருக்குறள், கம்பராமாயணம் ஆகிய இலக்கியங்களைத் தேடியதாகவும்; முத்தமிழ் முழங்கிய மதுரைமாநகரில் தமிழிற்குக் ''கதி''யாம் இலக்கியங்களே கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தால், தமிழ்மொழியை நிலைநாட்ட வேண்டும் என்னும் ஊக்கம் பிறந்தது; அவ்வூக்கத்தால், தமிழ்ச்சங்கம் தோன்றியது'' என்பர்.

யாவருங்கூறும் இக்கருத்துசாலவும் பொருத்தமுடையதே இருப்பினும் வேறு ஒரு காரணமுமுண்டு. சிறந்ததோர் கருத்து எனது சிந்தையில் தோன்றுகிறது. பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்கள் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமை உடையவர்கள். சங்ககாலத்தே பிறமொழிகளினும்தமிழ் சாலவும் சிறந்து விளங்கியது என்பதைத் தெளிவாக அறிந்தவர்கள். இன்று தமிழ் தாழ்வுற்று இருப்பதையும் உணர்ந்து வருந்தியவர்கள் பண்டு போல் தமிழ் அன்னை இன்று மேனில அடையஅருங்கலைகளைப் பூண்டு விளங்க அரும் பணிஆற்றவேண்

டும் எனவிரும்பினூர்- என்பதே தமிழ்ச்சங்கம் தோன்றியதற்குரிய சிறந்த காரணமாகும்.

இதனை

"பாவாணர்களை அதிகமாக ஆதரித்துப் பரிசுகள் வழங்கிவந்த தந்தை பொன்னுச்சாமித் தேவரைப்போல அவர் திருமகனூரான நம் தேவர் அவர்கள், பாவாணரிடம் அதிக ஆதரவு காட்டவில்லை. கவி பாடுவது ஒன்றையே தம் புலமைத் தொழிலாகக் கொண்டு ஊதியம் பெற முயல்பவர்களுக்கு அதிக ஆக்கம் அளித்தார் என்று சொல்லமுடியாது"

(1) முன்னோரின் பழைய நூல்களை ஆராய்ச்சி செய்வதும் அவற்றை எடுத்து எழுதுவதும்;

(2) புதிய நூல்களையும், பழைய தமிழ் வரலாறுகளையும் வெளியிடுவதும்,

(3) அவை போன்ற பிற செயல்களும்
தமிழ் வளர்ச்சிக்குரிய சிறந்த முறைகள் என்பதைத் தேவரவர்கள் நன்குணர்ந்திருந்தார்"

(செந்தமிழ் வளர்த்த தேவர்கள்-பக்கம் ; 103-104)

என்று மு இராகவையங்கார் அவர்கள் எழுதுவதால் நன்கு அறியலாம்.

மேலும் நம் தேவரவர்கள் கி. பி 1901-ஆம் ஆண்டு மதுரையில் கூடிய சென்னை மாநில அரசியல் மாநாட்டில், தமிழ்ச் சங்கத்தை அமைக்க வேண்டிய காரணங்களை விளக்கும் போது:

"தமிழ் வளர்ச்சி பெருகியிருந்த பழம் பெருமைகளையும் அதன் வளர்ச்சி குன்றிய தற்கால நிலைமையும் எடுத்துக் கூறி, அதன் பிறப்பகமான மதுரை மாநகரில் தமிழ்மொழி

நிலைபெற்று வளர்வதற்குச் சங்கம் ஒன்றைத் தாபிக்க தாம் உத்தேசித்திருப்பதை''

(செந்தமிழ் வளர்த்த தேவர்கள் -பக்கம்: 88)

என்று கூறியுள்ளமையாலும் அறியலாம்.

மேலும் தேவரவர்கள் இச்சங்கத்தைத்தொடங்கும்போது அங்கு மூன்று பிரிவுகளை அமைத்தார் என்று அறிகிறோம்.

1. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை.

2. பாண்டியன் புத்தக சாலை.

3. நூலாராய்ச்சி சாலை.

தமிழ்நாட்டு வரலாற்றை அறியவும், பழந்தமிழ் இலக்கியங்களை ஆராயவும் இவை உதவின இவ்வாராய்ச்சிக்குத் துணையாகச் ''செந்தமிழ்'', -என்ற திங்களிதழ் ஒன்றையும் தொடங்கி நடத்தி வந்தார் என அறிகின்றோம். அவ்விதழில் வெளிவந்த கட்டுரைகள் எல்லாம் தமிழ்மொழியை வளப்படுத்தும் புதுப்புது ஆராய்ச்சிகளாகும்.

சான்றாக:- 1) வேளிர் வரலாறு.

2) பண்டைக் காலத்தமிழர் மரக்கலப் பயிற்சி.

3) பறவைகளின் வாழ்க்கை.

4) கொல்லிப் பாவை.

என்பவற்றைக் கொள்ளலாம். மேலும் தமிழ்த் தாத்தா திருமிகு உ. வே. சா. முதலிய தமிழ் அறிஞர்களைக் கொண்டு, ஆங்காங்கே செல்லரித்துக் கிடந்த தமிழ் ஏடுகளைக் கொணர்ந்து அச்சிட்டு நூல்களாகத் தமிழகத்திற்கு வழங்கிய தேவரவர்களது செயலும் அந்நோக்கத்தைத் தெளிவாக்கும்.

பிற தமிழறிஞர் வாயிலாகத் தமிழாராய்ச்சியை வளர்த்தார் என்பதை அறிந்தோம், அது மட்டுமன்று தாமே சிறந்த

ஆராய்ச்சி அறிஞராய் விளங்கினர் என அறியும் போதுநாம் வியப்படைகின்றோம்; திகைத்து நிற்கின்றோம்

"பழந்தமிழர் சரிதம்"-என்றதலைப்பில் செந்தமிழ் இதழில் அரியதோர் கட்டுரை ஒன்று நம் தேவரவர்கள் எழுதினர்கள் அதில் "சிந்துச் சமவெளி" நாகரிகம் தமிழர்களுடையது என்றும் ஆரியர் பாரத நாட்டிற்கு வந்தபோது, அங்கு வாழ்ந்த தமிழர் நாகரிக மேம்பாட்டுடனும், தத்துவ அறிவுடனும் சிறந்து விளங்கினர் என்றும் கூறுகிறார்.

"ஆரியர் தம்மை உயர்ந்தோர் எனக் கூறிக்கொண்டாலும் அவர்கள் சிந்து நதி பாயும் பிரதேசத்தில் பிரவேசித்த போது நிலம், நீர், சூரியன், சந்திரன் முதலிய இயற்கையை வணங்கித் தம் மனைவி மக்களைக் காக்குமாறு வேண்டினர். அக்காலத்திலேயே ஆங்கு வாழ்ந்த பழங்குடியினராகிய தமிழ் மக்கள் ஒழுக்கத்தினும் ஞானத்தினும் சிறந்து விளங்கினர் என்பது யாம் காட்டும் உதாரணங்களால் நன்கு விளங்கும்"

(செந்தமிழ், 7ஆம் தொகுதி)

மோகஞ்சதோரா கரப்பா, அகழ்வு ஆராய்ச்சி முடிவுகள் வெளிவந்துவிட்ட இன்று சிந்துச்சமவெளி நாகரீகம் தமிழர்களுக்குரியது என்று கூறுவது எளிது. ஆனல் நம் தேவரவர்கள் அன்றே ஆராய்ந்து மேற்கண்டவாறு தம் கருத்தையும் திறனய்வு செய்து கூறியிருக்கின்றார் என்றால் அவர் ஆராய்ச்சித்திறனை என்னென்று புகழ்வது.

# "பாண்டித்துரையார் நாட்டுப்பற்று"

திருமிகு கு. துரைராசு எம் ஏ.
பேராசிரியர் பசும்பொன் தேவர் கல்லூரி. உசிலம்பட்டி

'பாண்டித்துரையார் நாட்டுப்பற்று' என்ற பொருளிலே பேச வேண்டும் என்று அன்புசால் அண்ணன் ஆண்டியப்பன் அவர்கள் பணித்திருந்தார்கள். நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் இல்லாத நிலையை நாம் பல இடங்களிலே காணலாம் நம்தலைவர் அவர்கள் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் கொண்டு மிக நன்றாகச் செயலாற்றி வருவதைக் கண்டிருக்கிறோம். நம்முடைய நாடு அந்நியனின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று 25 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த நூற்றாண்டிலே நம்முடைய சாணக்கியர்வள்ளுவரின் 2000 வது ஆண்டுவிழா கொண்டாடினோம் அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினோம். அண்மையில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.-யின் நூறாண்டு விழாவைக் கொண்டாடினோம். சில ஆண்டுகளுக்குப் பின்னால் வள்ளல் பாண்டித்துரைச்சாமித்தேவரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி இருக்கின்றோம். பாண்டித்துரையவர்கள் நாட்டுக்கு என்ன பணியாற்றினார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அரசியலில் இருப்பவர் நிலைதான் மக்களிடத்தில் உயர்கிறது. உதாரணத்துக்குச் சொல்லப்போனால் வ. உ. சி.யின் இலக்கியப் பணி தமிழர்கள் அறிந்து கொள்வது மிகப் பொருத்தம். அவர் செக்கிழுத்த செயல் அரசியலில் நிலைத்தது. அதனால் அவருடைய தமிழ்ப்பணி அதிகம் தெரியவில்லை. அரசியல்பணி தலைதூக்கியது.

அவர் செய்த நாட்டுப்பணி தலைதூக்கியது அதே சமயத்தில் அவரின் இலக்கியப்பணி இருந்த நிலையிலே இருந்து விட்டது. பாரதியினுடைய இலக்கியப்பணியும், அரசியல் பணியும் இணைந்து செயல்பட்டாலும் கூட, இன்னும் அவருடைய அரசியல் கண்ணோட்டம் இந்த நாட்டு மக்களுக்கு முழுமையாக

ஊடாடியது கிடையாது. அதைப் போலத்தான் மன்னர் பாண்டித்துரை அவர்களுடைய அரசியல் பணி என்ன காரணத்தினுலேயோ, அவர் மேற்கொண்ட செயல் எப்படியோ போய், அவர் செய்த தமிழ்ப்பணியும் அவர் செய்த தமிழ்த்தொண்டும் நிலைத்து விட்டன.

1867 – ஆம் ஆண்டு அவருடைய (வள்ளலுடைய) பிறந்த நாள் என்று சொன்னுல். 1872–இல் சரியாக ஐந்து ஆண்டுகளுக்குப்பின்னுல் வ உ சி தோன்றினர் அதன்பின் 1882இல் சரியாகப் பத்து ஆண்டுகளுக்குப் பின்னுல் பாரதியார் தோன்றினர், இந்த மூன்று பேருக்கும் உள்ள இணைப்பைப் பார்க்க வேண்டும். மொத்தமாகப் பார்த்தால் இந்த பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அரசியல் பணி தொடங்கி, எதிர்ப்பிலே போய், அவனுடைய மொழிப் பணியானது தலை தூக்கி விட்டது. இடையிலே இருந்த ஒருவனுடைய எதிர்ப்பு மறைந்து அரசியல் பணி தலைதூக்கியது மூன்ருவதாக இருந்தவன். அரசியல் பணியையும். மொழிப்பணியையும் இணைத்தே செயல்பட்டு இந்த நாட்டிலே முடிசூடா மன்னனுகக் காவியத் தமிழ்ப் பெரும் புலவனுக, வழிகாட்டியாக விளங்குகிருன். இந்த மூன்றுபேரை ஒப்பிட்டுப் பார்த்தால் தான் உண்மை புலனுக முடியும்.

பாண்டித்துரைத்தேவருக்கு மொழிப்பணி முதலிலேயே பெற்றது கிடையாது. இந்த நாட்டிலே உள்ள விழிப்புணர்ச்சி அவர் உள்ளத்திலே, அரசியலிலே ஏற்பட்டதினுலே தான் மதுரைக்கு வந்திருக்கின்றபொழுது, 1901–இல் அரசியல் மாநாட்டைமுடித்து, இலக்கியத்தைத்தேடினுர். இதைப்போல்சொல்லப் போனுல் இலக்கியப் பணியைக் கொண்ட பாரதியார், எட்டயபுரத்திலிருந்து 'சுதேசமித்திரன்' பத்திரிக்கையிலே பணியாற்றி, காசிக்குச் சென்றபோது 1905–ஆம் ஆண்டில் அவருடைய உள்ளத்திலே அரசியல் தலைதூக்கியது கிடையாது ஆனுல் திரும்பி வருகின்றபோது விவேகானந்தருடைய கருத்தைக்கேட்டு உண்மையான அரசியல்வாதியாக வந்தார். அந்தமாதிரி சென்றிருக்கா விட்டால் அரசியல் பணிக்குச் சென்றிருக்க முடியாது அதுபோல் தான் துரையவர்கள் அரசியல் மாநாட்டிற்கு வந்தி

ராவிட்டால் 'மொழிப்பற்று' எந்தஅளவில் இருந்திருக்குமென்று ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும். அதைப்போலத் தான் கப்ப லோட்டிய தமிழர் தூத்துக்குடிக்குச் சென்று தம்முடைய பணியைத் தொடங்கியிருக்காவிட்டால் கப்பலோட்ட வேண்டும் என்ற எண்ணம் எழுந்திருக்குமோ? என்று பார்க்க வேண்டும். இல்லையென்றால் துரைத்தனம் செய்திருப்பார்.

அதைப்போல பாண்டித்துரை செயல் செய்தார், இந்தச் செயலுக்கு இருந்தது அவர் உள்ளத்தில் ஏற்பட்ட புதிய மாறுதல். இன்னும் நூற்றாண்டு விழா எடுக்காமல் இருக்கின்றோம். வங்கத்துத் தாகூருக்கு நூற்றாண்டுவிழா எடுத்துவிட்டார்கள். தமிழ்நாட்டில் பாரதிக்கு விழா எடுப்பார்களா? என்பது சந்தேகமாக இருக்கிறது. வ. உ. சி. சிறையில் இருந்து துன்பப் பட்டார். இலக்கியப்பணி உணர்வு வந்தது. முதலில் இவ்வாறாக வ. உ. சி. யின் நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் இருந்தது. அவரை வைத்து பாண்டித்துரை அவர்களையும் பார்க்க வேண்டும். வ. உ. சி. யின் கப்பல் கம்பெனிக்கு முதலில் ஒரு லட்சம் வழங்கினார். அந்தப் பட்டியலையெல்லாம் நாட்டிலே அச்சிட்டு வெளியிட வேண்டும்.

தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டவேண்டும் என்று எண்ணினார்கள். அப்பொழுது இருந்த ஆங்கிலத்துரையிடம் சொன்னார்கள். ஒவ்வொரு செல்வந்தரையும் கூப்பிட்டு நன்கொடை எழுதச் சொன்னார்கள். அப்பொழுது இருந்த செல்வந்தர்களில் பெரியவர் 'சிவப்பிரகாச முதலியார்'. அவரிடம் கொடுத்து எழுதச் சொன்னார்கள். 10000 போடுவதாகச் சொல்லி எழுதினார், எழுதும்போது பத்தாயிரத்துக்கு எத்தனை '0' போட வேண்டும்என்று தெரியாமல் ஒருலட்சம் (100000) என்றுபோட்டுவிட்டார். ஆங்கிலத்துரையும் கேட்டுவிட்டார். அதனால் அவரும் கொடுத்து விட்டார். சிவப்பிரகாச முதலியார் பெயரையே வைத்து விடுவோம் என்றார் துரை. ஏனென்றால் 'சமீன்' துரை சொற்படி நடக்க வேண்டும்.

வ. உ. சி. தூத்துக்குடியில் கப்பல் கம்பெனி ஆரம்பித்தார். எட்டயபுரம் சமீன்தார் இதற்குப் பத்தாயிரம் கொடுத்தார். கொடுத்த பணமும் திவாலாகி விட்டது. இதன் பிறகு பாண்டித்துரைத்தேவர் ஒருலட்சம் கொடுத்தார் என்றால் லாபம் கருதி அல்ல. வ. உ. சி. ஆரம்பித்தார் என்று கொடுக்கவில்லை. இந்த நாட்டில் இப்படி ஒன்று தேவை என்று கொடுத்தார்.

இவ்வெண்ணம் கொண்டு ஒரு மன்னர் கொடுத்தார் என்றால் அதுதான் அவரின் நாட்டுப்பற்றின் உச்சக் கட்டமாக இருக்க முடியும். அந்தச்செயலை இந்த நாட்டு வரலாற்றிலே படைத்து விட்டோம். அந்தப் பட்டியலிலே இவர் தவிர வேறு சமீந்தார் கிடையாது. செல்வந்தர் தான் மற்றவர்களெல்லாம், இவர்கள் இலாபம் கருதிச் செய்திருக்கலாம். ஆனால் நம் சமீன்தார் லாபம் கருதி இச்செயலைச் செய்திருக்க முடியாது. இந்த சமீன்தார் வ. உ. சியை நம்பி, இந்தக்கப்பல்கம்பெனியை நம்பி, ஆங்கிலேயனை எதிர்த்து நடக்கும் ஒரு செயலுக்கு ஒரு லட்சம் கொடுத்தார் என்றால் அதைவிட நாட்டுப்பற்று வேறு ஒன்றும் இருக்கமுடியாது.

இந்நாட்டில் நல்லஅரசியல் கிடையாது. இப்பொழுது சொல்லப்போனால் சுதந்திரம் அடைந்ததைப்பற்றி அதிகம் பேசப் படுவதில்லை.

நூற்றாண்டு விழாக் கொண்டாடும் போது அவரின் செயலை நினைக்கவேண்டும். அவர் அரசியல் மாநாட்டிலே என்ன பேசினார். அது மறைக்கப் பட்டது. திருநெல்வேலியிலே பேசியதை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. அவருடைய நாட்டுப் பற்றை வெளிக்காட்ட வேண்டும். அவருடைய நாட்டுப்பற்றை நாட்டுமக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். வள்ளல்பாண்டித் துரை ஒரு வெறும் தமிழ்ப்புலவன் மட்டுமல்ல. தமிழ்வளர்த்தவர் மாத்திரம் அல்ல. வள்ளல் பாண்டித்துரைத் தேவர் இந்த நாட்டிலே வீரத்தை, நாட்டுமக்களுக்கு உணர்ச்சியை ஏற்படுத்தினவர். சாதாரணமானவர்கள் சொல்லமுடியும். ஒரு வக்கீல் சொல்ல முடியும். ஒரு தமிழாசிரியர் சொல்லமுடியும்.

ஆனால் ஆங்கிலப் பாளையக்காரன் பாராட்டமாட்டான், இருந்தும் பாராட்டினான். அந்த நேரத்தில் செய்ததை நாம் பாராட்டினால்தான் தமிழ்ப்பணியைத் தமிழன் உணர முடியும். ஆனால் இப்பணியை தமிழ்நாடு மாத்திரம் அல்ல இந்தியாவின் விடுதலைப் போர் முழக்கத்தைப் படிக்கின்ற போதெல்லாம், உலகமே படிக்கின்ற போதெல்லாம் உரோமப் புரட்சியை, பிரஞ்சுப் புரட்சியை ஆங்கிலநாட்டிலே படிக்கின்றதைப்போல, இந்த நாட்டிலே ஆங்கிலேயனை எப்படி எதிர்த்துக் கொடி தூக்கினான் என்று வரலாறு படிக்கின்ற போதே, பாண்டித் துரைத் தேவரின் வரலாறும் தலைதூக்கி நிற்கவேண்டும். அந்தச் செயல் செய்தால் நாம் மிகச் சிறந்த பணி செய்தவர்களாவோம் எனச் சொல்லிக் கொண்டு இந்த அருமையான வாய்ப்பை நல்கியவர்களுக்கு வணக்கம் சொல்லி விடை பெறுகிறேன்.

—0—0—

# 4. பாண்டி வள்ளல்.

கவியோகி: சுத்தானந்தபாரதி

"திருவளரும் சிவச்செல்வம் தேனூர்செந் தமிழ்ச்செல்வம்
திகழவேண்டிப்

பொருள்வழங்கித் தமிழ்ச்சங்கம் பொலியவைத்த
புரவலனும் பாண்டிவள்ளல்

அருள்வளரும் அறச்செல்வம் அறிஞர்தரும்
புகழ்ச்செல்வம் அன்புச்செல்வம்

தெருள்வளரும் கவிச்செல்வம் செழித்திங்கு
திருக்குறள்போல் வாழ்கின்றானே."

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் திருவிழா கண்கொள்ளாக் காட்சியாக நடந்தது. அவ்விழாவிற்குத்தெய்வசிகாமணிப் புலவர் என்னையும் அழைத்துச் சென்றார். கோபாலகிருட்டினப் புலவர் "தம்பீ வா" என்று என்னைப் பல புலவர்களுக்கு அறிமுகப் படுத்தினார். அவருள் முதன்மையானவர் பெரும் பேராசிரியர் சாமிநாதையர், திரு. நாராயணர், இராகவர், அரசன் சண்முகம் முதலியோர். புலவர் மன்றம் இலக்கியப் பொலிவெய்தியது. 'வருகிறார் பாண்டித்துரைத் தேவர்... எழுந்து நிற்போம்" என்றார் என் ஆசிரியமணி.

வந்தார் பாண்டித்துரை, மன்றத்தை மலர்விழியால் அளந்தார். புன்னகை பூத்தார். கைமலர் குவித்தார், மாண்புற அமர்ந்தார். நான் உலகையே மறந்தேன், பாண்டி வள்ளலான தேவரையே கண்கொட்டாது பார்த்தேன். அவர் விழியும் என்பால் அடிக்கடி திரும்பியது.

நெற்றி நிரம்பத் திருநீறு: சந்தனப்பொட்டுக்கு மேல் குங்குமப் பொட்டு காதில் வைரக்கடுக்கன். முறுக்கி விட்ட மீசை. சிந்தனை விழிகள். அழகான முகப்பொலிவு, சரிகைக் குல்லா. நீண்ட அங்கி. பழம் பாண்டி மன்னனே என்று வியக்கும் திருக்கோலத்துடன் விளங்கினார் பாண்டி வள்ளல். இடதுபுறம் அப்பாவு ஓதுவார் இசைக்கருவிகளுடன் அமர்ந்திருந்தார். அவர் பால் கண்ணைத் திருப்பினார் வள்ளல். உடனே "நீலமாமிடற்றால வாயிலான்" என்ற சம்பந்தர் தேவாரம் நடந்தது. தேவர் கண் மூடி, மனங்குவிந்து தமிழ் மறையைப் பருகி உருகினார். புலவர் மன்றத்தில் அமைதி பூத்தது. சங்கத் தலைமை ஆசிரியர் திரு நாராயணப் புலவர் வரவேற்பிசைத்தார். கவிதையாக இசைத்ததை உரைநடையிற் சொல்லுகிறேன்.

"பைந்தமிழ்ச் சோலையான பாண்டி மதுரையில் நான்காவது தமிழ்ச் சங்கத்தை நாட்டிய வள்ளலே நின்னைக் காணும் போது எத்தனையோ பெருமைகள் அலைமோதிக் கொந்தளிக்கின்றன, பாரி வள்ளல் முல்லைக்கொடிக்குத் தேரைத் தந்தது போலத் தமிழ்க்கொடி வளர நினது மாளிகைச் செல்வத்தையே தந்தனை. சேது நாட்டின் அருமை அளவற்றது. ஸ்ரீ இராமபிரானே வணங்கிய இராமேசுரம் அகில இந்தியக் கோவிலாக விளங்குகிறது. சங்க காலம் முதல் சேதுநாட்டுப் புலவர் சீர்சிறந்தோங்கினர். சிவகங்கைக்கு அருகே அள்ளூர் முல்லைபார், ஒக்கூர் மாசாத்தியார், திருக்கோட்டியூர் நல்லந்தார், வெள்ளைக்குடி நாகனார், திருப்புலாணி புல்லங்காடர் பாடல்கள் நெடுந்தொகை குறுந்தொகை, நற்றிணை, கைந்நிலை முதலிய சங்க நூல்களில் உள்ளன. இவர்களெல்லாம் சேதுநாட்டுப் புலவர். ஒட்டக்கூத்தர் பிறந்த மலரி சேதுநாட்டைச் சேர்ந்தது. கலிகுஞ்சரி பாரதியார், சிலேடைப் புலி வேம்பத்தூர் பிச்சுவையர், பாகவதம் பாடிய செவ்வைகுடுவார், தமிழில் சௌந்தரியலகரி பாடிய கவிராசர், செந்தில் பிள்ளைத்தமிழ் பாடிய பகழிக்கூத்தர். அரிச்சந்திர புராணம் பாடிய வீரை ஆசுகவி, கீழக்கரை வள்ளல் சீதக்காதி. படிக்காசுப் புலவர் அனைவரும் சேது நாடர். சேது மன்னர் கொடை வள்ளல்கள். ஒருதுறைக்கோவை பாடிய அமிர்த கவிராயருக்கு இரகுநாத சேதுபதி பொன்னங்கால் என்னும்

சிற்றூரை யளித்தார். அழகிய சிற்றம்பலக் கவிராயர், மதுரகவி முதலியோர் சேது மன்னர் தண்ணளியில் தழைத்தனர்.

முத்துராமலிங்க சேதுபதியின் அமைச்சரான பொன்னுச் சாமித்தேவர் மாம்பழக் கவிராயரைக் "கவிச்சிங்கம்" என்று போற்றிப் பொன்னும் புகழும் அளித்தார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தியாகராச செட்டியார் போன்ற பெரும் புலவர்களைப் போற்றிப் பரிசில் அளித்தார். தனிப்பாடல் திரட்டு 46 கோத்தளித்தார். ஆறுமுகநாவலரைக்கொண்டு திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையார், சேது புராணம் முதலிய அரிய நூல்களை வெளியிட்டார். இவர் பாலவநத்தம் ஜமீந்தார் அதிக குடிகளுக்குச் செய்த நன்மை அளவற்றது. 1870-இல் இவர் காலஞ்சென்றபோது புலவர் பெருமக்கள் அனைவரும் கண்ணீர் வடித்தனர்

இவர் புதல்வர் நமது சங்கப் புரவலர் மாண்புமிகு பாண்டித்துரைத்தேவர் அறிவும், திருவும், திறமும், அழகும், கலையும், பொலியும் செந்தமிழ்ச் செம்மல் இவரும் பாசுகர சேதுபதியும் ஆர்வமுடன் தமிழ் பயின்றனர். அழகர்ராசு இவர்களுக்குச் செந்தமிழ் பயிற்றினர். பூச்சி, சீனிவாசஐயங்கார் இசை பயிற்றினர். இராமசாமிபிள்ளை பெரியபுராணம் சொன்னர். பழநித்தம்பிரான் சித்தாந்த பாடம் சொன்னர். பாசுகர சேதுபதிக்குக் கண்ணுயிருந்த இரண்டு புலவர் இரா. இராகவையங்கார், இசைவாணர் பூச்சி, சீனிவாச ஐயங்கார். அவரிடம் கம்பனையும், இவரிடம் இசை நுணுக்கத்தையும் கற்றூர், பாசுகர சேதுபதியுடன் பாண்டித்துரையும். பாண்டித்துரையின் சோமசுந்தர விலாசம் புலவர் சங்கமாயிருந்தது.

அனைத்தினும் சிறந்த தொண்டு இந்தத் தமிழ்ச் சங்கமே. தமிழ்ச்சங்கம் 14—9—1901-ல் எழுந்தது. இயல், இசை, நாடகத் தமிழுக்கு அங்கே மூன்று நாட்கள் திருவிழா நடந்தது. பெரும்புலவர் மணிகளான டாக்டர் சாமிநாதையர், மு. சடகோபராமானுசாசாரியார், சூரியநாராயண சாசுதிரியார்.

மறைமலையடிகள், அரசன் சண்முகனார், செல்வகேசவராய முதலியார், பூரணலிங்கம்பிள்ளை, கோபாலகிருட்டிணயர், தெய்வ சிகாமணிப்புலவர் முதலியோர் திருவிழாவிற் பங்கு கொண்டனர், அரசாங்கமுதல்வர் திரு வி.கிருட்டிணசாமிஐயர் தலைமையில் விழா நடந்தது.

இச்சங்கம் வளம்பெற வளர்கிறது. செந்தமிழ்க் கலாசாலை அடியேன் தலைமையில் நடககிறது. பலபுலவர்கள் இங்கே பயின்று நாடெங்கும் தமிழ்ப்பணி செய்கிறார்கள். நூலாராய்ச்சி சாலை புலவர் இரா. இராகவையங்கார் தலைமையில் அரியபணி செய்து செந்தமிழ் என்னும் இலக்கிய மலரை வெளியிடுகிறது. பாண்டியன் புத்தகசாலை பல அரிய நூல்களும் ஏட்டுப் பிரதிகளும் கொண்டு மாணவருக்கும் ஆராய்ச்சியாளருக்கும் பெரும் பயனளிக்கிறது. பாண்டிய வள்ளல் அள்ளி விடுகிறார். அவர் வண்மையால் மாணவர் கவலையில்லாமல் உண்டுடுத்திருந்து கல்வி கற்கின்றனர். இங்கே பயின்ற புலவர்கள் நாடெங்கும் ஆசிரியராயிருந்து தமிழ்ப்பணி செய்கிறார்கள்.

அறத்தால் வருவதே இன்பம் எனக்கொண்ட பாண்டி வள்ளல் இராமனாதபுரத்தில் ஒரு பள்ளிக்கூடம் நாட்டினார். இங்கே சேதுபதி உயர்பள்ளிக்கூடம் உயர்வாக நடக்கச் செய்தார். இவர் பாசுகர சேதுபதியுடன் கூடி சுவாமி விவேகானந்தரைப் போற்றி சிகாகோவுக்கு அனுப்பினார்."

இவ்வாறு திரு நாராயண ஐயங்கார் புகழுரை பொழியும் போது தேவர் அடக்கமான மகிழ்வுடன் அமைதியாயிருந்து தலைமையுரையை மெல்லிய தென்றல் போல் தொடங்கி மேக கர்சனைபோல பீறிட்டுத் தமிழார்வத்தைச் சண்டமாருதமாகப் பொழிந்தார். ஒவ்வொரு சொல்லும் என் உள்ளத்தில் பதிந்தது. தமிழர் அனைவருக்கும் பயன்பட அந்த வியன் அருவியைச் சிறிது இங்கே காண்போம்.

"புலவர் திரு நாராயண ஐயங்கார் பொழிந்த புகழ்மொழி யெல்லாம் என்னைவளர்த்த தமிழ்த்தாய்க்கே யாகுக. தமிழன்பு மணிகாள் இங்கே கூடியிருக்கும் புலவர்கள் தமிழ்ப் பணியைத் தவமெனக் காக்கவேண்டும். பழந்தமிழ்ச் செல்வத்தைப் பண்புறக் காத்துப் புதுத்தமிழ்ச் செல்வத்தைப் பயனுறப் போற்ற வேண்டும். மாணவர்களை மாண்புறப் பயிற்றி வழிவழியாகத் தமிழ் வளம்பெற வழங்கிவரச் செய்யவேண்டும். இக்காலம் தமிழை உயிரெனப் போற்றும் உத்தமருக்கு நன்றி செலுத்துவோம் நம்முன்னே நிலவும் பேரிசைப் புலவர் பிரம்மதிரு உ. வே. சுவாமிநாதஐயர் (கைதட்டல்) பட்டி தொட்டியெல்லாம் பறந்து சென்று பழந்தமிழ்ச் சுவடிகளைத்தேடி விரிவான குறிப்புரைகளுடன் வெளியிட்டுவரும் வியன் பணியைப் போற்றுவாம். சிலப்பதிகாரத்தைப் பூண்டு தமிழன்னை கிண்கிணி நடை பயில்கிருள். சிலம்போசை கேட்குந்தோறும் ஐயரை வாழ்த்துவோம்.

இப்போது ஐம்பெருங்காப்பியத்தில் ஒன்ருன, மதுரைச் சீத்தலைச்சாத்தனுர் யாத்த மணிமேகலை வெளிவருகிறது. பெருந்தகைப் புலவர் சாமிநாதஐயருக்கு நாம் நன்றி செலுத்தக் கட்மைப்பட்டுள்ளோம். தமிழ்ச் சங்கத்தை நல்ல முறையில் நடத்தி செந்தமிழ் நடத்திய மாணவரைப் பயிற்றிவரும் புலவர் திரு நாராயணஐயங்கார், இரா. இராகவஐயங்கார் முதலியோர் செய்யும் தமிழ்ப்பணி போற்றற்குரியது. நச்சினர்க்கினியார் சங்கம் நாட்டி மாணவரை ஊக்கித் தமிழுக்கு ஆக்கமளிக்கும் பண்டித கோபாலகிருட்டிணயரின் அயராத் தொண்டை எல்லாரும் அறிவர். இவ்வாறு தமிழ் முன்னேறி வருகிறது. தமிழ்த் தாய் செங்கோல் பிடித்து நிற்கிருள். மக்கள் எழுந்து நின்று அன்னைக்கு அன்புத் தொண்டு செய்க.

இந்தக் காலத்தில் ஆளும் ஆங்கிலத்தில் மோகங்கொண்டு தமிழைப் பலர் மதிப்பதில்லை. கற்றவர் என்போர் ஆங்கிலமே பேசுகின்றனர். அல்லது ஆங்கிலம் பெரிதும் கலந்து சில தமிழ்ச் சொற்களை உதிர்க்கின்றனர். தமிழன் தமிழனுடன் தூயதமிழிற்

பேசவேண்டும். ஆங்கிலேயர் ஆங்கிலேயருடன் ஆங்கிலத்திலே தான் பேசுகின்றனர். ஆங்கிலமும் கற்போம்; ஆனால் தமிழைப் பறி கொடுக்கக் கூடாது. தமிழைத் தமிழர் போற்றாவிட்டால் வேறு யார் போற்றுவார்? தமிழின் அருமை பெருமை போப்பு-கால்டுவெல், வீரமாமுனிவர் போன்ற ஆங்கிலப் புலவரையும் கவர்ந்தன. திருக்குறளும், திருவாசகமும் ஆங்கிலவுலகில் தமிழார்வம் தூண்டியுள்ளன ஜி யூ. போப் தம்மைத் தமிழ் மாணவன் என்றே கருதுகிறார். ஃபாதர் பிசுகி (வீரமாமுனிவர்) தமிழ் பயின்று தேம்பாவணி என்னும் மகாகாவியத்தை இயற்றினார். நமது இலக்கணத்தை ஆய்ந்து ஆங்கிலேயர் சிற்றிலக்கணங்களைத் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள்,

நாம் தமிழ் இலக்கியத்துடன் நமது திருநெறிச் சமயத்தையும் போற்ற வேண்டும். ஐரோப்பியர் கிறித்துவ சமயத்தை உலகெங்கும் பரப்புகிறார்கள். நமது மதுரையில கிறித்தவப் பாதிரிமார் செய்து வரும் கல்வித் தொண்டும் மருத்துவத் தொண்டும் பாராட்டத் தக்கவை. இந்தவழியில் நமதுசிவசமயப் புலவர் ஆறுமுக நாவலர் செய்து வரும் தமிழ்ப் பணியையும், சைவ சமயத் தொண்டையும் நாம் போற்றுகிறோம். அவரது பாலபாடம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் எல்லாம் தமிழுக்குச் செய்த மாபெருந் தொண்டுகளாகும். திருக்குறள் பரிமேலழகர் உரை வெளியிட்ட பிறகுஇன்று அவர் திருக்கோவையாரை ஆய்ந்து வெளியிடுகிறார். எம்மையாளுடைய இறைவன் அருளால் தமிழ் விழித்தெழுந்து வீரநடை போடுகிறது. ஆனால், எங்கெங்கே பார்த்தாலும் ஆங்கிலமே தலை தூக்கி நிற்கிறது. தமிழ் இங்குமங்கும் விழித்தெழுந்துள்ளது. ஐரோப்பிய மொழிகளைப் போலவே, நமது தமிழும் பலதுறைகளில் பல அறிவியல், கலையியல் துறைகளில் வளம் பெற வேண்டும். அதற்கு ஏராளமான எளிய இனிய உரைநடை நூல்கள் புதுப்புது பொருட் செறிவுடன் வெளி வர வேண்டும். மேனாட்டார் பெருமை கொள்ளும் விஞ்ஞானம், கணிதம், வரலாறு, பொருளாதாரம், அரசியல் நூல்களெல்லாம் உலக

மேதாவிகள், சரித்திரங்களெல்லாம் தமிழில் வெளிவந்து பரவ வேண்டும் ஆங்கிலம், பிரெஞ்சு ஜெர்மனி மொழிகளில் அரிய இலக்கியங்களும், நவீனங்களும், கலைச்செல்வங்களும் குவிந்துள் ளன அவையெல்லாம் சுவைபடத் தமிழில் வந்து நம்மை ஊக்க வேண்டும். நாம் செய்தது துளியளவு; செய்ய வேண்டியது கடலளவு.

தமிழன்பர்களே, அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நாற் பொருளையும் பயக்கும் தமிழை சிவபெருமான் அருள் பெற்ற தமிழைப் போற்றி உய்வோமாக.

சிறுவயது முதல் நல்லபேச்சுக்களைக் கேட்டுக் குறிப்பெடுத்து அதைக் கட்டுரையாக எழுதி வைப்பது என் வழக்கம். இக் கட்டுரைகளைக் கொண்டே தமிழர் தனிச் சிறப்பு என்ற நூலைத் தொகுத்து சைவ சித்தாந்தக் கழகத்திற்கு வெளியிடத் தந்தேன்.

பாண்டித்துரையின் பேச்சு எனக்கு அமுதமாயிருந்தது. அவர் பேசும் போதே சில கவிகள் எழுதினேன். அவற்றுள் ஒன்று தான் கிடைத்தது. அதுவே இந்த நினைப்புரையின் தலைப்பில் நிலவுகிறது. பாண்டித்துரைத் தேவருக்கு மதுரையில் சிலை நாட்டித் திருவிழாக் கொண்டாட வேண்டும்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு நான் அடிக்கடி சென்று புலவர்களைப் பார்ப்பதுண்டு. அவருள் என் உள்ளத்தைத் தொட்ட உத்தமர், குறிப்புகளை இங்கே தருவேன்.

# யாண்டுங்காணேன் மாண்டக்கோனே!

பண்டித வித்துவான்: திருமிகு கி. பொன்னுராமன்
மதுரை.

'வையை என்னும் பொய்யாக் குலக்கொடி' பாய்ந்து கொழிக்கும் வளப்பத்திற்கும், மாசு மறுவற்ற வீரத்திற்கும் மதுரத் தமிழ்மொழியின் வாழ்விற்கும் என்றென்றும் நின்றிலங்கும் ஏற்றம் பெற்ற பாண்டிவள நாட்டில் தோன்றிய பெருமான் பாண்டித்துரைத்தேவர் ஆவர். அன்னார் கற்றோர் அறியாஅறிவினராயும், கற்றோர்க்குத்தாம் வரம் பாகிய தலைமையராயும் விளங்கியவர்; தன்னினும் தண்ணார் தமிழையே பெரிதாகப்போற்றிய பேராளர். புலவர் போற்றும் புரவலர் தலைவன் அருள்நிறைந்த முகத்தினன்; புலவருக்குப்பொன்னும் பொருளும் வரையாது ஈந்த வள்ளியோன்; வசையில்லாக் குடியினன். 'தென்னம் பொருப்பன் நன்னாட்டுள் வாழ்ந்த தெள்ளுதமிழ்ப் புலவரின் நெஞ்சை அள்ளித்திறை கொண்ட பண்பாளன். பாடுனர்க்கு ஈந்த பல் புகழோன்: கலைவளர்த்த காவலன். செவி வாயாக நெஞ்சு களனாகப் பல்காலும் சான்றோர் வாயிலாகக் கேட்டறிந்து ஏடாண்ட எண்ண மாண்ட ஏந்தல் புது மடத் தோன்றல்: தமிழ்ப் புதுமணம் பரப்பிய வீரவொளி வீசும் கருங் கண்மறவன் விளங்கு பகை கடிந்த கலங்காச் செங்கோலன்: இசை விளங்கு கவிதை நெடியோன். சங்கத் தமிழைத் துங்கமுற வளர்த்த தம் வாழ்வாலும் வாக்காலும் மன்பதைக்கு என்றென்றும் வழிகாட்டிய வாய்மையாளன். அஃகி அகன்ற அறிவும் ஆழ்ந்த நுண்ணுணர்வும் பெற்று விளங்கிய பெருந்தகை. இத்தகைய செம்மை சான்ற பண்பு நலனும் சீரிய புலமை வளனும் ஒருங்கே பெற்றுத் திகழ்ந்த அப்பெரியோனிடம் புலன்நா உழவர் புதுமொழி கேட்டுண்ணும் பேராவலால் ஒருங்கே ஈண்டினர். அஃதே போன்று வள்ளல் தேவரவர்கள் நறவுண்ண வேட்கும் தாதுண்

பறவை போலப் புலவரின் பாடலைக் கேட்டறியும் அயற்சியில்லா முயற்சியாளராகவும் திகழ்ந்தார். பரம்பிற் கோமான் பாரியும் கொல்லியாண்ட வல்வில் ஓரியும், மறப்போர் மலையனும், கூர்வேல் கூவிளங்கண்ணிக் கொடும்பூண் எழினியும், பெருங்கல்நாடன் பேகனும், திருந்துமொழி மோசி பாடிய ஆயும், உள்ளிவருநர் உலைவு தீரத் தள்ளாது ஈந்த தகைசால் வண்மை நள்ளியும் ஆகிய அக்கடையேழு வள்ளல்களோடு வைத்து எண்ணக்கூடிய எட்டாவது வள்ளல் துவரத் துறந்த ஞானி நமது பாண்டித்துரைத் தேவரவர்கள்.

செப்பருங் குணத்தவனும் அப்பெருந்தகை ஒருநாள் செந்தமிழ் புரக்கும் மாடமலி கூடல் மாநகர் காண விழைந்தார். தேனூர் கமழ் தொங்கல் மீனவன் பழவிறல் மூதூரில் தமிழ்ச் சங்கம் இல்லா நிலையைக் கண்டார். முச்சங்கம் வளர்த்தத் தண்ணார் தமிழ் மொழிக்கு அதுபோழ்து எச்சங்கமும் இல்லா நிலையைக் கண்டு ஏங்கினார். ஒரு காலத்தில் ஆடவரும், மகளிரும், உழவரும், தொழிலாளரும், வணிகரும், அரசரும், அந்தணரும், என எண்ணற்ற பல் பிரிவினரும் ஒருங்கிணைந்து தமிழாய்ந்த அப்பெரும்பதியில் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் நற்றமிழ்ப் புலவர்கள் பழந்தமிழ் நூற்கள் கிடைக்கப் பெறாது உள்ளங் தாங்கா வெள்ளத்தினராய்க் காட்சியளித்தனர். தழைத்தோங்கிய தமிழ்ப் பதியில் தமிழ்ப் பற்றும் மாய்ந்து விடுமோ என்றெண்ணி உளம் நசிந்தார். அன்றிரவு முழுதும் அவர் கண்கள் பாடொல்லா நிலையையெய்தின. பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்த தமிழை மீண்டும் சங்கத்திலே இருக்கவைக்க உறுதி பூண்டார்.

பின்னாட்களில் நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தரணிக்கு நிறுவிக்காட்டினார். தமிழ்ப் பனுவல்கள் அத்துணையும் தமிழ்ச் சங்கத்தில் நிரம்பின. வயங்கு மொழிப் பெரும் புலவர்களின் துணை கொண்டு கையெழுத்துப் படிகளாக இருந்த தமிழ் நூற்களையெல்லாம் பெரும் பொருள் செலவிட்டு, அச்சேற்றி நூல் வடிவம் தந்தார். குன்றமன்ன வான்பொருளையெல்லாம் தமிழ்ச் சங்கத்திற்காக இழக்கத் துணிந்தார்.

தமிழ் மொழி, தமிழ்க்கலை, தமிழர் நாகரீகம் என்பன தளர்ச்சி யடையாவண்ணம் தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மதுரை யாகக் காட்சியளிக்கச் செய்தார். "உலகமெல்லாம் பரவும் வகை, நாளும் கண்டார். தேன் மயங்கு பாலினும் இனிய தென்தமிழ் மதுரையெனச் செப்பச்செய்த தென்னவர் தெண் ணிலா அன்னாராவர். மாவண் தமிழ்த் திறம்கொண்ட அங்கெடி யோன் சைவ மஞ்சரி, பன்னூற்றிரட்டு போன்ற ஒப்பற்ற நூற்களைத் தமிழ் கூறும் நல்லுலகம் ஓர்ந்துணர்ந்து பயனடை யும் படி விட்டுச் சென்றுள்ளார்.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே' என்ற உயர் நோக்கிற்கேற்ப தமிழ் கெழு கூடலில் தமிழ்வையை வற்றா நூல் வளம் பெருகச் செய்த தோடன்றி தேவர் அவர்கள், வெள்ளையரின் கொள்ளைப் போக்கைக் கண்டிக்கச் சீறியெழுந்த செம்மல் வ. உ. சிதம்பரத் திற்கு விடுதலை வேட்கையின் அறிகுறியாம் கப்பல் கட்டும் தொழிலுக்கு இரண்டு லட்சம் ரூபாய் உவந்தளித்த அச்செயற் கரிய செயல் நாட்டுப் பற்றால் எழுந்த தன்றோ!

இத்தகைய செம்மை சான்ற மொழிப் பற்றும், நவிலு வதற்கொண்ணா நாட்டுப் பற்றும் ஒருங்கே அமையப் பெற்று வாழ்ந்த அப்பல்புகழோனும் வசையில்லாக் குடியினனின் வர லாறு மறைக்கப்பட்டது என்ன காரணம் பற்றியோ அறியோம். மன்னர் மரபில் தோன்றிய மாபெரும் குற்றந்தான் போலும் மறைக்கப்பட்டதற்குரிய ஏது அன்னாரை காணார்மலையத்து அருந்தவனும், காப்பியனும் சொன்ன கன்னித்தமிழைப்பயிற்று விக்கும் தொல்லாணை வழிவந்த நல்லாசிரியர்களின் உள்ளங் களில் தேடினேன். நெடுந்தமிழ் நாட்டின் தலை நகரின் கண் இருந்தமிழ்ப் புலவர் பலர் சிலையாக நிற்கும் நெடிய தோற்றங் களில் அவரைத் தேடினேன். தண் பாண்டி நாட்டின் தலை யாய இடங்களிலெல்லாம் தேடினேன். முடிவில் யாண்டுங் காணேன் மாண்டக் கோனை!

**

# கல்வெட்டில் ஓர் நிலையாமைத் தத்துவம்...

அ. இராசேந்திரன்

தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக் கழகம்
திருவனந்தபுரம்.

மனிதன் இன்பம், துன்பம் இரண்டிலும் பட்டு அழிப வன். துன்பம் தன் எல்லையைக் கடக்கும்போது தன்னைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்குகிறான் இப்படி வாழ்ந்தோம் (புறம்: 112), இப்படி வாழ்கிறோம். (புறம்: 248) இப்படி வாழ் வோமோ? (புறம் 195) என்று முக்காலம் பற்றிச் சிந்திக்கிறான். இச் சிந்தனையில் பிறப்பதே நிலையாமைத் தத்துவம். இவ்வெண் ணம் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டதெனலாம். காஞ் சித் திணைக்குப் பொதுவிலக்கனம் கூறும்போது,

"பாங்கரும் சிறப்பிற் பல்லாற்றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே"

(தோல்: புற: 78)

என்பர். உரையாசிரியர், அறம், பொருள், இன்பம், யாக்கை செல்வம், இளமை முதலியன நிலையாமை உடையதென உரை வகுத்தனர். சங்க இலக்கியங்களில் தொல்காப்பியத்தையொட் டியே, போர்க்களம், சுடுகாடு, இல்லம் மூன்றையும் நிலைக்களங் களாகக் கொண்டு நிலையாமை வலியுறுத்தப்படுகிறது.

பிணி, மூப்பு, சாக்காடு, மிக்குடைய இவ்வுடம்பு நிலை யாமை உடையது என்று தமிழ் இலக்கியங்கள் கூற வடநூலார்

திரையும், மரணமும் என்ற இரண்டைக் கூறுவர் சிலர் பிணியைக் கூட்டி உரைப்பர். ஒரு சிலர் இவற்ருேடு கவலை யும் அவலமும், கையாறும், அழுங்கலும் மாட்டியுரைப்பர்.

போர்க்களத்தை மையமாக வைத்துப் பாடப்படும் நிலையாமைப் பாடல்கள் காஞ்சித் துறையில் பாதிக்கு மேல் வருகின்றன. அனைத்தின் ஊடேயும், சாவின் ஓலம் கேட்ப தாக ஆய்வாளர் சி. சத்தியமூர்த்தி கருதுகிருர். புலவர், சாவைக் காட்டி உலக வாழ்வில் சோர்வை. அச்சத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொள்ளாமல் சாவுக்கு முன் இதைச்செய் எனவற்புறுத்தப்படுகிறது. அறம் செய் (புறம் 359) போரைச் செய் [புறம்: 362] தவத்தைச்செய் [புறம் 363] எனப் பலவாறு கட்டளையிடுகின்றனர். அவற்றை மேற்கொள்ளுவதன் மூலம் வீடு பேறு கிடைக்கும் என நம் பினர் வீடு பேறு நிமித்தமாகச் சான்ருேர் பலவேறு நிலை யாமையை உரைத்த மதுரைக் காஞ்சி இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

சிலம்பில், நிலையாமைக் கூற்றில் போரிடல் பற்றிய சிந்தனையில்லை 1) **இளமை** 2) **யாக்கை** 3) **செல்வம்** மூன்றின் நிலையாமையைக் கூறி அறம் செய்வீர் என்று கூறப்படுகிறது. ''நாளை செய்குவம் அறமெனில் இன்றே'' (சிலம்பு: 28: 179) என்றும் ''செல்வமும் யாக்கையும் நிலையா; உளநாள் வரையாது ஒல்லுவதொழியாது செல லுந்தே எத்துக் குறுதுணை தேடுமின்'' [சிலம்: 30-199] என்றும் கூறி மறுமை உலகிற்கு உற்ற துணையாகிய அறத்தினைத் தேடுமின் என்று கூறும்.

சுந்தரரின் ஏழாம் திருமறை நிலையாமையையும் உலகத்துன்பத்தையும்; மிகவாக வற்புறுத்துகிறது.

மணிமேகலை குற்றம் வினை, பயன் அனைத்தும் துன் பம்பயப்பன; இவற்ருல் பெற்ற இவ்வுடம்பு நிலையில்லாதது

(மணி: 30: 176) இளமை யாக்கை, வளமுடைய செல்வம் நிலை பெருதன. அறமேசிறந்த துணை. செல்லும் இடமெல்லாம் அறம் செய்யுங்கள் (மணி: 48: 135-37 என்று கூறுகிறது.

வள்ளுவர், செல்வம் நிலையாமையைக் கூறி அறத்தைக் கூறுகிருர். (333). உடம்புக்கும் உயிர்க்குமுள்ள உறவை ஆழச் சிந்திக்கிருர். கூட்டில் இருந்து வெளியேறும் பறவையாக காட்சி தருகிறது. சாவின் மீதுள்ள அச்சம் மறுமையைத் தேடி அழைக் கிறது. தவத்தின் வலிமை புலப்படுகிறது. (குறள்: 338) ஐம்புல ஆசையும் அடக்க விழைகிருன் (குறள் 343) இவை வீடு பேற்றின் மீது கொண்ட பற்ருல் அமைவன. (குறள்: 346). நாலடியார் உலகில் நிலையாமை புன்னுனி மேனீர் போன்றது;இன்றே அறம் செய்வீர்! ( நாலடி 3: 9 ) என்று வற்புறுத்தும்.

சிலம்பிற்குப் பின் பெரும்பான்மை இலக்கியங்கள் வீடு பேற்றுக்கு வழி அறமே என்று வலியுறுத்துவதைக் காணலாம்' இனி தந்திவர்மன் ஆட்சிக்காலக் கலவெட்டு ஒன்று கூறும் நிலை யாமைக் கொள்கையைக் காண்போம்.

திருச்சிக்கு வடக்கே 12 மைலில் திருவெள்ளறை என்னும் ஊரில் நாலுநிலைக் கேணி ஒன்று காணப்படுகிறது. இக் கிணற்றை மாற்பிடுகு பெருங்கிணறு என இக்கிணற்றுக் கல் வெட்டுக் குறுக்கிறது. இக்கிணறு, பல்லவ அரசன் தந்திவர்ம னின் 4 ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 779) ஆலம்பாக்கம் இசைய நல்லூரான் தம்பி கம்பன் அரையன் வெட்டிஞன் எனக் குறிக்கப் பட்டுள்ளது. இக் கல்வெட்டை யொட்டி ஒரு செய்யுட் சாசனம் காணப் படுகிறது.

' ஸ்ரீ கண்ட(ா)ர் காணுர் உலகத்தில் காதல் செய்து நில்லாதேய்!
பண்டேய் பரமன் படைத்த நாள் பார்த்து நின்று நையாதேய்
தண்டார் மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லா முன்
உண்டேல் உண்டு மிக்கது உலகமறிய வைமினேய்! ''

என்று காணப் படுகிறது. இதன் பொருள், ஸ்ரீகண்டர் (சிவன்) காணு இவ்வுலகில் வாழும் மக்காள்! காதல் செய்து வாழ

வேண்டாம். பரமன் உனக்கு படைத்த நாளை யெண்ணி நலிய வேண்டாம். மூப்பு உன்னை அடைந்து நீ வருந்து முன் உலகில் நல்லதென்று உள்ளவற்றை (அறம்!) உடனே உலகம் அறியச் செய்க! என்று கூறும். ஸ்ரீ கண்டார், காணார் எனின், இதைக் கண்டவர், காணாதவர் என்ற பொருளும் கூறலாம். இச்சாசனம் இளமை நிலையாமையும், முதுமை வருமெனக் கூறுதலான் முது காஞ்சியில் (தொல்: புற: 79) அடக்கலாம். 'குளித்து மணல் கொண்ட கல்லா இளமை' என்ற புறம்: 243 ஆம் பாடலுடன் ஒப்பிட்டுக் காணலாம்.

இச்சாசனத்தில் நில்லாதேய், நையாதேய், என யகர மெய்யீற்றில் முடிகிறது. பெரும்பாலும் சாசனச் செய்யுள் இவ்வாறே முடியும்.

இக்கட்டுரையின் வழி ஒரு உண்மை தெளிவாகிறது, புலவர், உலகத்தில் நிலையாமையைக் கூறி உலக வாழ்க்கையில் சோர்வையும், அச்சத்தையும், புகட்டுவதை நோக்கமாகக் கொள்ளாமல் மறுமையுலகில் இன்பமாக வாழ இதைச் செய் என வலியுறுத்துவதைக் காண்கிறோம்.

# தமிழ் நூல்களுள் யானை _ 3

சித்தாந்த சைவமணி வித்துவான் : சு. சுவர்ணகாளீச்சுரன்
திருவையாறு.

## நற்றிணை காட்டும் யானைக்காட்சிகள்

நெஞ்சமோ துணைவியின் வருத்தத்தை நீக்க வேண்டியதே முதலில் செய்ய வேண்டியது என்று வற்புறுத்துகின்றது. ஆனால் அறிவோ செய்யத் துணிந்த கடமையே முதலில் முடிக்க வேணடியது. பின்பே மற்றவை என்று தடுக்கிறது. இவ்வாறு ஒரு தலைவன் உள்ளம் நெஞ்சத்தாலும் அறிவாலும் தனது வசம் இருப்பதனால் ஒரு முடிவுக்குவர இயலாமல் தேய்கிறது. தேய்ந்து இற்றுப் போகும் நிலைக்கு ஒரு புலவர் யானைக் காட்சி ஒன்றினை எடுத்துக் காட்டி விளக்குகின்றார்.

இரண்டுயானைகள் ஏதோ ஒவ்வொறு பக்கம் இழுப்பதைக் காண்கின்றோம். ஆம்! ஒரு கயிற்றினையே வேகமாகத் தன் தன் பக்கம் இழுக்க முயற்சிக்கின்றன. ஆனால் அக்கயிறோ பலமுள்ளதல்ல. அதுவும் புரிகள் விட்டுத் தேய்ந்த நிலையில் உள்ள கயிறு என்னவாகும். இவ்விரண்டு யானைகள் தன் பலத்தினைக் காட்டத் தொடங்கி இடையிலகப்பட்ட கயிறமைந்த நிலையினை தலைவனது உள்ளம் அறிவிற்கும் நெஞ்சத்திற்கு மிடைப்பட்டு தத்தளிக்கின்ற நிலைக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது. இத்தகைய தேய் புரிபழங் கயிற்றை எடுத்துக் காட்டியதாலேயே இப்புலவர் தேய் புரி பழங் கயிற்றினர் எனப் பெயர் பெற்றார். இத்தகைய புலவர்களது சொல்லோவியங்கள் நிறைந்த அகப்பாடல்களின் தொகை நற்றிணையாகும் இத்தொகை நூலுள் புலவர் பலர் காட்டும் யானைக் காட்சிகளையும், அதனால் அப்புலவர்கள் யானை பற்றிய செய்திகளை எவ்வளவு கூர்மையாகக் கவனித்துள்ளனர் என்பதனையும், சங்க கால வனத்தின் வனப்பினையும் அறிந்து மகிழத் துவங்குகின்றோம்.

## யானையின் அமைப்பு

யானையின் தடக்கையின் சிறப்பினை உற்று நோக்கிய புலவர் கதிரின் வலிமைக்கு எடுத்துக் காட்டுகின்றார். பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் புலவர் அத்துதிக்கையினிடத்தேயுள்ள புள்ளிகளின் சிறப்பினைக் கூறுகின்றார். அறுவை வாணிகன் இளவேட்டனார் இரும்பிணித் தடக்கையானை என்கின்றான். இதனால் துதிக்கை பெரிதாகவும் கருச்சதை பொருந்தியதாகவும் இருக்கும் என அறிகின்றோம். வெள்ளைக் குடி நாகனார் புகர்முகவேழம் என எடுத்துரைப்பார். நல்வெள்ளியார் வரிநுதல் யானை என்பார். மேலும் யானையின் நெற்றி மெல்லிய தோலுடையதென்பதைனை' பூநுதல் யானை'' என்று கள்ளிக் குடிப்பூதம்புல்லனார் எனறும் புலவர் புகல்கின்றார். யானையின் வடிவத்திற்குக் கண் சிறியதென்பதனை சிறுகண்யானை என்று இளங்தேவனார் என்னும் புலவரும் இயம்புகின்றார். யானைக்கு கை பெரியது. அது போல கண் சிறியது என்பதனை சிறுகண் யானை பெருங்கை ஈரினம். என முதுவெண்கண்ணனார் குறிப்பிடுகின்றார். செவியினை கபிலர் முறச்செவு என எடுத்துரைப்பார். அவருடைய நண்பரான பரணரோ நெய்தல் இலைபோல யானையின் செவியிருக்கும் என்பதனை களிற்றுச் செவியான பாசடை'' எனவுரைப்பார். ஆலங்குடி வங்கணனார் என்னும் புலவர் பெண் யானையின் செவியும் நெய்தல் இலை போன்றிருக்கும் என்பதனை ''வயப் பிடிச் செவிபன்ன பாசடை" எனவுரைப்பார். வளைந்த கவுளையும் பெரிய வாயினையும் உடையது யானை என்பதனை ''கொடுங்கவுள் பேழ்வாய் யானை என அரசிளங் குமரனார் உரைப்பர். யானையின் கொம்பினைக் குடவாயிற் கீரத்தனார் வெண்கோட்டு யானை என எடுத்துக் காட்டுவார். காந்தளரும் பின் நுனியைக் காணும் போது யானையின் கொம்பு புலவரது நினைவிற்கு வருகிறது. வெண்கோடு வயக்களிறு என்பார் இளநாகனார். இரத்தம் நிறைந்த யானைக் கோட்டின் நுனியைக் கண்டார் மருதனிள நாகனார். உடனே அதனை மகளிர் கண்ணுக்கு உவமையாக்கினார். மற்றொரு புலவர் வாழையின் மொட்டின் நுனியைப் பார்த்தார். உடனே அவருக்கு யானைக் கொம்பு நினைவுக்கு வந்தது கபிலர் வேழத்தின் கொம்பில் முத்து ஒலிக்கும் எனப் பாடினார். கொம்பினொடு யானைக்கு மத நீரும் சிறப்புடையதாகும் எனக் கூறுவதையும் புலவர்கள் மறந்தாரில்லை'' ''கடாங்கழி

இய கத னடங்கு யானை தடவு நிலை ஒரு கோட்டன்ன" எனக் கூறினர் ஒரு புலகர்.

கபிலரும் இதற்கு ஒரு உவமையே எடுத்துக் காட்டிவிட் டார். "இசைபட வாழ்பவர் செல்வம் போல காண்டொறும் பொலியும் கதழ்வாய் வேழம்" எனக் காட்டினர். இதனை நிறம் மிகக்கருமை என்பதனை சேந்தங் கூத்தனர் "வண்ணமிகுந்த அண்ணல் யானை" என எடுத்துக் கூறுவார். இத்தகைய யானை யின் கால்கள் பருத்த நிலைமையும் அக்காலினல் தூசியை எழுப் பும் நிலையையும் "பரு உத்தாளுதைத்த வெண்புறகளரி" என் றும், அக்காலாம் எழுப்பும் மண் பொடி நிறைந்து வழியை மறைக்கும் என்பதனலும் அறிகின்ருேம். யானையின் பிளிறல் மூங்கில் காற்றுள் மோதி எழும் ஒலியைப் போலிருப்பதும் உடல் மலைக்குன்று போலிருப்பது பாதுகாப்பு நிலைக்காக இயற்கையி லேற்பட்டது என்பதனைப் புலவர் எடுத்துக் காட்டுகின்ருர். இத் தகைய பாதுகாப்பு வடிவை "வரை போல் யானை" என ஒளவைப் பாட்டி உரைப்பதை உணர்கின்ருேம். இவ்வாறு நற்றிணைப் பாடல்களைப் பாடிய புலவர்கள் யானையின் அமைப் பினை காட்டியதை உணர்ந்த நாம், யானையின் உணவு முறை களைக் கூறுவதையும் காண்போம்.

### யானையின் உணவுமுறை

யானையானது தன் கன்றினை அணைத்துக் கொண்டு வாழைத் தோட்டத்துள் நுழைந்து வாழையைத் தின்று பலாப் பழத்தையும் உண்ணவர அதனைக் கண்டு குறமக்கள் அஞ்சுகின்ற காட்சியை முதுவெங்கண்ணனர் என்னும் புலவர் நமக்குக் காட்டுகின்ருர். வெண்ணெல் எனப்படும் வெண்மையான அரிசியையுடைய மலை நெல்லாகிய ஐவன நெல்லையுண்ட யானை களைப்பு நீங்க மிளகுக் கொடி பரந்து வளரும் பக்கமலையில் கிடந்து உறங்குவதைக் காட்டுகின்ருர். நல்வெள்ளியார் என்னும் புலவர் பெருந்தகை கபிலர் யானை தினைப்பயிரை உண்ணுங் காட் சியைக் காட்டுகின்ருர். கன்றீன்ற துன்பத்தையுடைய தனது துணை

யாகிய பெண் யானைக்கு உணவு கொடுப்பதற்காகத் தினைப்புனத்தில் விரைந்து சென்று தினைக்கதிரைக் கொய்கிறது. என்னே களிற்றின் பொறுப்புணர்வு. அதனைக்கண்ட குறவர்களோ அதனைத் துன்புறுத்த எண்ணாது அச்சமுறுத்திப் போக்க எண்ணுகின்றார்கள். என்னே வேடர்களின் வன விலங்கினைக் காக்கும் பொறுப்புணர்வு. அதனால் கொள்ளிக் கட்டைகளைக் காட்டி அச்ச முறுத்தி விரட்டுகின்றார்கள்.

இதனால் யானைக் கூட்டங்களுக்கு நெருப்பைக் கண்டால் அச்சம் என்பதனையும் அறிகின்றோம். இக்காட்சியைக் காட்டும் கோவூர் கிழாரைக் கும்பிட்டு வாழ்த்துகின்றோம். மேலும் சூல் கொண்ட பிடியானைக்கு முங்கின்முளையைத்தின்ன மிக்க ஆவலுண்டு என்பதனையும், அதனால் அதற்குக் கெடுதியுண்டு என்ற குறிப்பினையும் கந்தரத்தனார் என்னும் புலவர் காட்டுகின்றார் வேங்கையின் தழையைக் கவளமாகத் தனது பெண் யானைக்கு ஆண்யானை தரும் காட்சியினையும் நாம் காண்கின்றோம். பெண் யானையின் பசிபோக்க ஓமை மரத்தினைக் களிறு வீழ்த்துவதைப் பெருங்கண்ணனார் என்னும் புலவரும், சிறிய இலைகளையுடைய வேல மரங்களில் பெரியவற்றை வீழ்த்துவதை மருதனி நாகரும் நமக்குக் காட்டுகினறனர்: மேலும் யானைக்கு உணவைவிட மிகவும் தேவைப்படுவது நீர்: முழுமையாக வளர்ந்த யானை ஒன்றுக்கு முப்பது காலன் முதல் ஐம்பது காலன்வரை தண்ணீர் வேண்டும் என வன விலங்காய்வாளர் கூறுகின்றனர். இத்தகைய நீருக்காக யானை வனத்தில் படும் பாட்டினைப் புலவர்கள் காட்டுகின்றார்கள்.

வெய்யில் வெம்மை மிக்க பருக்கைக் கற்கள் நிறைந்த பள்ளப் பாங்கான இடத்தில் குந்தாலியால் வெட்டப்பட்ட குளத்தையடைந்து பசுப் பாதுகாக்கும் ஆயர்கள், அதனை உள்ளே குடைந்து செய்த நீர்க் குழிகளை ஒருவகை வில்லினால் மூடிவைப்பார்கள். யானைக் கூட்டம் சென்று அவ்வாறு மூடி வைத்த வில்லை நீக்கி தனது பெண் யானைக்கும் கன்றுகளுக்கும் ஊட்டுகின்ற காட்சியை நப்பாலத்தனாரும், பெருங்களிறு பிடியானைக்கு

நீர் கொண்டு செல்லுதலை அறுவை வாணிகன் இள வேட்டனார் நமக்குக் காட்டுகின்றார்கள்.

யானைகளின் வாழ்க்கை

யானைகள் குடும்பம் நடத்தும் திறனைக் காணுங்கள் நீரை ஆநிரைகளின் பத்தலினின்றும் தனது கன்றுக்கும் பெண்ணுக்கும் ஊட்டுதலோடு தனது குடும்பத்தின் பசியைக் களைவதற்காக யானைபடும் பாட்டையும் புலவர்கள் ஆங்காங்கே எடுத்துக் காட்டுகின்றார்கள். பிடி யானை கன்றோடு வசிக்கபுலி முதலியவற்றால் அதற்கு இடையூறு வாராமல் களிறு காக்கும் திறத்தினைத் தொல் கபிலர் நம் கண்முன் தோன்றச் செய்கின்றார். மேகம் தவழ்தலால் அம்மலையில் படுத்திருந்த தனது பெண் யானையின் வடிவம் மறைய உடனே ஆண் யானை அலமரும் காட்சியை கபிலர் காட்டுகின்றார். இத்தகைய காதல் யானை பிறர் காதலுக்கும் இடையூறாக விருக்க விரும்பவில்லை. ஒரு காதலர்கள் தனது பிடி யானையின் பக்கத்தே கூடி மகிழ்தல் கண்டு அவர்களுக்கிடையூறு தரலாகாது என்று தனது துதிக்கையை மறைத்துக் கொண்டு அப்பாற் சென்றதாம். அதனைக்கண்ட பிடி, நம்மை மறந்துதான் அது செல்கின்றது என்று கருதி பிளிரத் தொடங்கி விட்டதாம். இத்தகைய தோர் காட்சியினை பாலை பாடிய பெருங் கடுங்கோ பகர்கின்றார்:

மலைச்சாரலில் உள்ள பெரும் பாம்புகள் யானையையும் விழுங்கி விடுமாம். இதனைக் கண்டு பெண் யானை வருந்துவதை மாமூலனார் காட்டுகின்றார். இவ்வாறு களிற்றை விழுங்கிய பாம்பானது வயிரம் பொருந்திய ஒரு மரத்தைச் சுற்றி வளைத்தலையும் சேந்தம் பூதனார் காட்டுகின்றார்.

மற்றொரு யானைத் தம்பதிகள் மலையினின்றும் இறங்கிவருகின்றன பெண் யானையால் ஒரு பள்ளத்தில் இறங்க முடியவில்லை. ஆண் யானை தான் கிழிறங்கி தனது கையை நீட்டி தனது பிடியைக் கீழே இறங்கச் செய்கிறது. இதனைக் கண்டு பெண் யானை மகிழ்ந்தது. ஆண் யானையும் மகிழ்ந்தது. திடீரென்று

அதன் தலையில் இடி விழுந்து ஆண் யானை இறக்க அதனால் பெண் யானை ஏங்கித் தவிக்கும் காட்சியினை தொல்கபிலர் எடுத்துக் காட்டுகின்றார்.

## யானையும் புலியும்

புலி தனது குறுங்கையினால் யானையைக் கொல்வதனையும் அதனைக் கண்டு பெண் யானை வருந்துவதனையும் சீத்தலைச் சாத்தனார் கபிலர் போன்ற பெரும் புலவர்கள் காட்டுகின்றார்கள். களிற்றைக் கொன்ற புலி தன் வாயின் குருதியை வேங்கை மரத்தில் துடைத்துக்கொள்ளும் காட்சியை வெள்ளைக்குடி நாகனார் விளம்புகின்றார். இவ்வாறு யானையைக் கொன்ற புலி வேங்கை மரத்தில் துடைத்துக் கொள்கின்றது.

ஆனால் புலியைக் கொன்ற யானையோ அவ்வாறு துடைத்துக் கொள்ள விரும்பவில்லை. அருவி நீரில் தன் கொம்பைக் கழுவிக் கொள்கின்றது. மழை நீரிலும் கழுவிக் கொள்ளுமாம். களிறும் புலியும் பொருவதைக் கண்ட மலைச் சிறுவர்கள் தண்டகப் பறைகொட்டி மகிழ்வார்களாம். ஏன்தான் மலைமேலிருந்து கண்டு களிக்கின்றார்கள். தண்டகப் பறையொலி கேட்டு புலியும் யானையும் தன் மீது பாய்ந்தால் என் செய்வதென்று கருதவில்லை. புலியை யானை கொல்லும் காட்சியினைக் காண்கிறார்கள். இவ்வாறு புலியைக் கொல்லும் யானையைச் சிங்கம் கொன்று விடுமாம். இத்தகைய யானையின் கொம்புகளை கானவர் மிகவும் வேண்டி விரும்புவார்கள்'' என்று கபிலர் காட்டுகின்றார்.

## நற்றிணை காட்டும் யானை

இவ்வாறு சங்கமருவிய தொகை நூல்களுள் ஒன்றாகிய நற்றிணையால் யானையின் அமைப்புக்கள், யானையின் உணவு முறைகள் வாழ்க்கையில் வருந்துன்பங்கள், புலியுர் யானையும் போரிடுதல், யானையின் வீரம், யானையின் தந்தத்தின் விலை மதிப்பு முதலியவற்றை அறிந்தோம். இனிச் சங்கமருவிய தொகை நூல்களுள் ஒன்றாகிய குறுந்தொகையைக் காண முயல்வோம்.

°°

# நாலும் இரண்டும்

— பூ. சொல்விளங்கும் பெருமாள் எம். ஏ. பி. டி.
வெள்ளைச்சாமிநாடார் கல்லூரி, மதுரை.

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்பது ஆன்றோர் வாக்கு. திருக்குறளும் நாலடியாரும் பல்வேறு வகைகளில் ஒப்புமையுடையன என்றாலும் எவ்வெவ் வகைகளில் வேற்றுமைப்படுகின்றன என்பதனை ஆய்வதே எனது நோக்கம். காலத்தாலும் ஆட்சி, சமயம், சமூக அமைப்பு, வெளியார் தொடர்பு, புதுமை வேட்கை, ஒரே வாழ்க்கையில் ஏற்பட்ட சலிப்பு முதலியவற்றாலும் கருத்துக்களில் வளர்ச்சியும் மாற்றமும் ஏற்படலாம். குறளுக்கும் நாலடிக்கும் இடையில் காலம் ஐந்நூறு ஆண்டுகளையாவது நீந்தியிருக்கவேண்டும். ஆகவேதான் பல்வேறு கோணங்களில் கருத்துக்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வேற்றுமையே இல்லாவிட்டால் குறள் இருக்கும்போது நாலடி ஏன் தோன்றவேண்டும்? மலையிலிருந்து இழிந்துவரும் பேராற்றின் நீரைச் சமவெளியிலுள்ள நிலங்கள் உறிஞ்சிப் பயன்தந்து வளம் பெருக்குவதைப் போன்று, திருக்குறளுக்குப் பின்னால் தோன்றிய நூற்களுள் பெரும்பாலானவை அதன் கருத்துக்களை முழுமையாகவோ அன்றிப் பகுதியாகவோ எடுத்தாண்டு பயன்பெற்றுள்ளன. தங்க நகையில் வைரம் பதித்து நகையழகைப் பெருக்குவது போன்று பின்னெழுந்த நன்னூற்களும் குறட்கருத்துக்களைப் பதித்துப் பயன் விளைத்தன. நாலடியாரும், குறட்பேராற்றைப் பயன்படுத்திச் சிறந்த விளைச்சல் தரும் நல்ல நஞ்சை நிலமாக அமைந்துள்ளது எனலாம். ஆயினும் அந்த நாலடியில் குறளில் இருந்து வேறுபடும் இடங்களுமுண்டு. நாலையும் இரண்டையும் ஒப்பிடும்போது இவ்வேற்றுமைகளை ஆய்வது இன்பம் பயக்கும்.

குறளில் போலவே நாலடியிலும் அறம், பொருள், இன்பம் எனும் முப்பால் அமைப்பே இருக்கிறதெனினும் அறத்துப்பாலில் வள்ளுவர் முதலில் இல்லறத்திற்குச் சிறப்

பிந்து இல்லறவியலை வைத்தார். ஆனால் நாலடியில், காலத்தின் நிழலோ, சமண சமய மேலாட்சியோ தெரியவில்லை. துறவறத்திற்குச் சிறப்பிந்து முதலில் வைக்கப் பெற்றிருக்கிறது.

நிலையாமையைப் பற்றி வள்ளுவர் ஓர் அதிகாரத்தில் கூறிச்சென்ற செய்திகளை நாலடியாரில், யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை என மூன்று அதிகாரங்களால் நூன்முகத்திலே விரிவாகச் சொல்லித் துறவற மேன்மையைக் கூறக்காண்கிறோம். "துறவறம் முத்தியை யடைதற்குக் காரணமாதலால் அச் சிறப்புப்பற்றி, அதுமுன்னும், இல்லறம் துறவறம் போல முத்தி பெறுதற்குக் காரணமாகாததினால் அச்சிறப்பின்மை பற்றி அது பின்னுமாக வைக்கப்பட்டது" என்று உரையாசிரியர்கள் வலிந்து விளக்கமாகக் கூறுகிறார்கள். இல்லறவியலிலும் இல்லறத்திற்கே உரிய வாழ்க்கைத் துணைநலம் பற்றியோ மக்கட்பேறு பற்றியோ நாலடி குறிக்கவில்லை. சமணசமயக் கருத்தின் வேர் இல்லறத்தை வெறுத்ததால் உயிர்ப்பகுதியை நாலடி துறந்துநிற்கிறது. துறவறத்திலும் புலால் மறுத்தல், கள்ளாமை, கள்ளுண்ணாமை போன்ற செய்திகளை நாலடியார் கூறாமல் இருப்பது வியப்பாக இருக்கிறது.

காமத்துப்பாலில் வள்ளுவர், உண்மைக் காதலின் தோற்றம், வளர்ச்சி, இன்பம் முதலியவற்றை வாழ்க்கைக்கேற்ற வகையில் வகுத்துக் கூறுகிறார். நாலடியாரில் வரும் காமத்துப்பாலினை ஆசிரியர் உயர்ந்த காதலாகக் கொள்ளவில்லை; கீழான காமமாகவே கொண்டுள்ளார். அதன் முதலில், "பொதுமகளிர்" எனும் அதிகாரத்தைக் காண்கிறோம் காமம் எனும் சொல்லின் பழம்பொருளான காதலை வள்ளுவத்தில் கண்டு சங்க இலக்கிய மரபியல் வாழ்க்கையைச் சுவைபட உணர்கிறோம். காமத்தின் இற்றை இழிபொருளில் பொதுமகளிரின் கீழ்மையின்பக் கேட்டை நாலடியில் பார்க்கிறோம்.

"அங்கோட் டகலல்கு லாயிழையா ணம்மோடு
செங்கோடு பாய்துமே யென்றாண்மன்
செங்கோட்டின்
மேற்காண மின்மையால் மேவா தொழிந்தாளே
காற்கானேய் காட்டிக் கலுழ்ந்து" எனும்

நாலடியில், பொதுமகளிரின் பொய்க்காதலைக் கூறுகிறார். செல்வம் நிறைந்திருந்த வேளையில் "நீ மலைமேல் ஏறிவிழின் யானும் வீழ்வேன்" என்று சூழுரைத்தாள். பொருளற்றுப் போனதும், அவளே, என்காலில் ஏதோ ஒரு நோய் வந்து விட்டது; ஆகையால் உயிர் விடுவதற்கு மலைமேல் ஏற முடியாதுஎன்று கூறிவிட்டாள். பொதுமகளிர், பொருளுக் காகப் பலபடப் பேசுவர் என்று பழித்துக்கூறிய நாலடி ஏன் இந்தப் பாடலை காமத்துப் பாலில் அமைக்கவேண்டும்? இம்முறை வள்ளுவத்திலிருந்து வேறுபடுகிறது.

"அன்பின் விழையார் பொருள் விழையும்
ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத்தரும்" என

வள்ளுவரும் பொருட்பெண்டிரின் இழிவுரைகிறார். ஆயினும் அவர் கூறுவது பொருட்பாலில்; உயிர்க்காதலைக் கூறும் காமத்துப்பாலில் அல்ல; நாலடியார் கூறுவது காமத்துப் பாலில். இருநூல்களும் வாழ்க்கையை எவ்வாறு நோக்கு கின்றன என்பதனை இவ்வதிகாரங்கள் அமைந்த இடங் களில் வெளிப்படுத்துகின்றன.

நாலடியார், 'காமநுதலியல்' எனும் இறுதி அதி காரத்தில் ஒவ்வொரு பாடலுக்கும் துறை விளக்கம் கூறி குறுந்தொகை நற்றிணை போலச் சுவைபடக் கூறிச் செல் கிறது. துறைவிளக்கங்கள் திருக்குறளில் இல்லை. உரை யாசிரியர்கள் தாம் ஏற்பன கூறியிருக்கிறார்கள்.

நாலடியிலுள்ள நாற்பது அதிகாரங்களுள் இருபத் தொன்பது அதிகாரங்களைத் திருக்குறளிலும் காணலாம். யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை, குடிப்பிறப்பு, மேன்மக்கள், நல்லினம் சேர்தல், நட்பிற் பிழை பொறுத்தல், ஈயாமை, கீழ்மை, கற்புடை மகளிர், காமநுதலியல் போன்ற பதினொரு அதிகாரங்கள் நாலடிக்கே உரிய தனித்தலைப்புக்கள்.

நாலடியிலுள்ள அறிவுடைமை, பெருமை, இன்மை போன்ற அதிகாரங்களில் உள்ள பாடல்கள் பல முறையே அடக்கம், துறவு, செல்வ நிலையாமை போன்ற தலைப்புக் களில் உள்ள பாடல்களாக அமைந்திருக்க வேண்டியவை.

அறிவுடைமை எனும் அதிகாரத்தில், "நல்கூர்ந்த மாக்கட்கு அணிகலமாவது அடக்கம்" என்று அடக்கத்தில் வரவேண்டிய கருத்தினையும், "இனந்தீதெனினும் இயல்புடையார் கேண்மை மனந்தீதாம் பக்க மரிது" என்று நட்பில் வரவேண்டிய செய்தியையும் கூறுகிறார். பெருமை எனும் அதிகாரத்தில், "காதலித்து ஆதும் நாமென்று மவாவினைக் கைவிட்டுப் போவதே போலும் பொருள்" என்னும் துறவுச் செய்தியினையும்,

"இற்சார்வின் ஏமாந்தேம் ஈங்கமைந்தேம் என்றெண்ணிப்
பொச்சாந் தொழுகுவார் பேதையார்" என்னும் துறவுச் செய்தியையும் கூறுகிறார்.

இன்மை எனும் அதிகாரத்தில்,
"கடகஞ் செறிந்த தம் கைகளால் ..
உப்பிலி வெந்தை தின்று உள்ளற்று வாழ்பவே"
என்று செல்வ நிலையாமைக் கருத்துக்களைக் கூறுகிறார். பத்துப்பத்தாகத் தொகுக்க வேண்டும் எனும் எண்ணத்தால் இம்மிகைப் பாடல்கள் வேறதிகாரங்களில் இடம் பெற்றிருக்கலாம். திருக்குறளில் இத்தகு குழப்பங்கள் இல்லை; அதற்குக் காரணம் ஒரேயாசிரியர் எழுதியமை யாகலாம்.

திருக்குறட் கருத்துக்களுள் நூற்றுக்கு மேலான வற்றை ஆட்கொண்ட நாலடி சிலவிடங்களில் முதலதை மறுத்தும் பேசுகிறது. கருத்து வளர்ச்சியும் சமயச் சார்பால் ஏற்பட்ட உள்ளமாறுபாடும், ஆட்சி வேறுபாடும் பிறமொழி மேலாட்சியும் அதற்குக் காரணமாகலாம்.

'நலம்புனைந்துரைத்தல்' எனும் அதிகாரத்தில், காணப்படும் ஒரு குறள்—

"முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு"

அன்புகொண்ட காதலன், தன் உள்ளத்து அழகை எல்லாம் தன் உள்ளம் விரும்பும் காதலியின் உடம்பிலும் காண்கிறான்.

"கண்டு கேட்டு உண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள"

வென்று கூறிய வள்ளுவர் இன்னும் சற்று நுணுக்கமாகச் சென்று, மேனி, முறுவல், நாற்றம், கண், தோள் ஆகிய அவன் உள்ளம் பிணித்த உறுப்புக்களின் நலம் புனைந் துரைக்கின்றார். தன்காதலியின் மாந்தளிர் நிறமும், முத்துப்போன்ற உள்ளம் குளிர்விக்கும் முறுவலும், மனத்திற்கு இதமான அவளது மேனிமணமும் உயிருண்ணும் வேல்போன்ற கண்ணும், வேய் போன்ற திரண்ட வளவளப்பான தோளும் அவனை ஈர்த்தன. ஐம்புலனும் இன்பம் நுகரும் வண்ணம் அமைந்த ஒருவனது காதலியால் உயிரும் வளருமல்லவா? காதலியின் அழகில் மனம் ஈடுபட்டு இருப்பவரின் உள்ளப்பாங்கை இவ்வாறு இப்பாடலில் கூறுகிறார் வள்ளுவர்.

ஆனால், நாலடியாரில்,

"முல்லை முகை முறுவல் முத்தென் றிவைபிதற்றும்
கல்லாப் புன்மாக்கள் கவற்ற விடுவெனோ
எல்லாரும் காணப்புறங்காட்டுத் திரிந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்" என்று

ஒரு பாடல் வருகிறது. 'ஒரு பெண்ணின் புன்முறுவலில் மயங்கி, அறிவுகெட்ட கீழான மக்கள், அதனை முல்லை, முகை, முத்தென்று வாயில் வந்தபடி பிதற்றுவார்கள். ஆனால் சுடுகாட்டில் உதிர்ந்து கிடக்கும் பல், எலும்பு ஆகிய வற்றின் உண்மையை அறிந்த நான் அவ்வாறு வருந்த விடுவேனோ?''

முல்லையின் நறுமணம் போலும் மேனிமணமும், அரும்பு போன்ற வெள்ளிய சிரிப்பும், முத்தின் தன்மை தரும் உடம்பும் உடைய பெண்ணைப் பார்த்ததும் நாலடியாசிரியருக்குச் சுடுகாட்டு நினைவு வருகிறது பெண்ணின் முறுவலை முல்லை, முகை, முத்தென்று புனைந்துரைப்பவரைக் 'கல்லாப் புன்மக்கள்' என்கிறார். வள்ளுவரோ, 'முறிமேனி முத்தம் முறுவல்' என்று பாராட்டிக்கூறினார். கல்லாப் புன்மக்கள் என்று நாலடியாசிரியர் யாரைக் கூறுகிறார்?

பெண்ணின் சிரிப்பில் சுடுகாட்டைக்கண்ட ஆசிரியர், பெண்ணின் கண்ணில் எதைக் காண்கிறார்?

"தெண்ணீர்க் குவளை பொருகயல் வேவென்று
கண்ணில் புன்மாக்கள் கவற்ற விடுவெனோ
உண்ணீர் களைந்தக்கால் நுங்கு சூன்றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்"

தெளிந்த நீரிலுள்ள குவளை மலரென்றும், ஓடியாடிப் போர் செய்யும் கயல்மீன் என்றும், கண்டார் உயிருண்ணும் வேல் என்றும் கண்ணைப்பற்றிக் கூறுகிறார்கள்—யார்?—கண்ணிருந்தும் கண்ணைப் பற்றியறியாத கண்ணில்லாப் பேதையர். பனங்காயின் உள்ளேயுள்ள நுக்கும் நீரும் சூன்று எடுத்தபின் அதில் குகைபோன்றிருக்கும் கண்ணின் தன்மையை, அழிந்த மண்டையோட்டில் கண்டவர், கண் வீச்சில் மயங்கார். மங்கையரின் கண்ணில் நுங்கு எடுக்கப் பட்ட பனங்காயைக் காண்கிறார் நாலடியாசிரியர். திருவள்ளுவரோ,

"காணிற் குவளை கவிழ்ந்து நிலநோக்கும்
மாணிழை கண்ணொவ்வே மென்று",
"மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று",

"மலரன்ன கண்ணாள்", "வேலுண்கண்", என்றெல்லாம் கண்ணினை விதந்துரைக்கின்றார்.

நாலடியாசிரியருள் பெரும்பான்மையோர் சமணரென்பார். அவர்கள் காலத்தமிழ்ச் சமுதாயத்தை வரலாற்றுக் கண்கொண்டு ஆராயுமிடத்து, அது பண்டைக் கலைகளை மறந்ததாய், உலகத்தை மறந்ததாய், பெண்களைப் பேருலகம் செல்லும் வழிக்குத் தடை என்று நம்பியதாய்த் தெரிகிறது. இசையும், நாடகமும் மறைந்த நாட்கள் அவை. அதனால்தான், இல்லறத்தைப் போற்றிய வள்ளுவருக்கு எதிராக இல்லறத்தைப் போற்றாது. துறவறத்தை நாலடியார் போற்றியதைக் காண்கிறோம்.

திருக்குறள் உலகப்பொதுமறை என்பர் ஆன்றோர்- அதில் ஒரு தனிப்பட்ட நாடு, மன்னன், மலை, ஆறு, மொழி, இனம் போன்றவற்றின் குறிப்பைக் காட்டாது உலகப்

பொது அறங்களைக் கூறிச் செல்கிறார். நாலடியாரில், அது தோன்றிய காலத்துப் புரவலரான பெருமுத்தரையரது குறிப்புக் காணப்படுகிறது.

"பெருமுத்தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச் சோறார்வர் கயவர்", என்றும்
"நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிர வாதவர்" என்றும்

வரும் குறிப்புக்களில் தனிப்பட்ட ஒரு வள்ளலின் பெயர் சுட்டி வந்தமை காணலாம். கம்பர் சடையப்பரை, காளமேகப் புலவர் சந்திரன் சுவர்க்கியை, வில்லிபுத்தூரார் வரபதியை, மண்டல புருடன் கிருட்டின தேவராயரைக் குறிப்பிட்டதுபோல் நாலடியாசிரியரும் பெருமுத்தரையரைக் குறிக்கின்றார். திருக்குறளில் தனிப்பட்டார் பெயர் யாண்டும் குறிக்கப்படவில்லை என்பது யாவரும் தெரிந்த செய்தி.

நாலடியாரில் ஏறக்குறை ஐம்பத்தொரு பாடல்கள் ஆடூஉ, மகடூஉ, நன்னெஞ்சு முன்னிலைப் பாடல்களாக அமைந்துள்ளன. வான்றோய் மலைநாட, பொருகடல் தண் சேர்ப்ப, நிரைதொடீஇ, தடங்கண்ணாய், நன்னெஞ்சே என வரும் பாடற்பகுதிகள் அதனை உறுதிப்படுத்தும். கருத்துச் செறிவின்மையால் இடம் அடைக்க வந்த சொற்கூட்டங்களேயன்றி அவற்றுள் பெரும்பொருள் செறிந்திருப்பதில்லை. இத்தகு வெற்றுச் சொற்கள் குறளில் இல்லை எனலாம்.

வள்ளுவர் சொல்லுக்குக்கொடுக்கும் அடைகளுக்கும் அளவற்ற பொருள் செறிவு உண்டென்பதனை அறிவோம்.

"உறுபசியும் ஓவாப்பிணியும், செறுபகையும்
சேரா தியல்வது நாடு" எனும் குறளில் வரும்

உறு ஓவா, செறு எனும் அடைகள் சிறந்த பொருள் உடையன நாட்டில் வாழும் மக்களுக்கு இன்றியமையாத் தேவை பசி. அற்றது போக்கி உணின் நோய் வராது என்று உயிர் மருத்துவம் கூறுபவர் வள்ளுவர். ஒரு வேளையில் உண்ட உணவிற்கும் மறுமுறை உண்ணும் உணவிற்கும் இடையில் சிறிது காலம் தாழ்த்தவேண்டும்—எவ்வளவு காலம்? நன்றாகப் பசிப்பது வரை; உண்டது அற்றது

வரை. ஆனல் அந்தப்பசி பட்டினியாகி விடககூடாது. உடலுக்கு உரம்சேர்க்கும் பசி வேண்டுமேயன்றி உடலையும் குடலையும், உள்ளத்தையும் வறளச்செய்யும் மிக்கபசி, உறு பசி கூடாது—சிறுபசி வேண்டும் என்கிருர்.

பிணியிலும் பலவகையுண்டு. தனி மனிதனுக்கு வரும் சளி, காய்ச்சல் போன்றவையும் நோய்தான்; வாதம். பித்து. பெருநோய் போன்றனவும் நோய்தான். இவை தீராப்பிணிகள், சிறுபிணிகள் உடம்பிலுள்ள சிறு குறை களால் வந்து போபவை; அவற்றை உணவூட்டத்தால் போக்கிவிடலாம். ஆனல் தீராப் பெருநோய்களால் உயிருக்கே பேராபத்து வரும். தனிமனிதனை வேதனை செய்யும் நோய்களும், சமுதாயத்தை ஊரை அழிக்கும் காலரா, வைசூரி போன்ற நோய்களும் தீராப்பிணியாகி விட்டன என்ருல் அவை நாட்டை அழித்துவிடும். சிறு பிணி சேர்ந்தால்உடலுக்கு உரமூட்டவேண்டும்என்பதற்கு ஓர் அறிகுறி. ஓவாப்பிணி வந்தால் நாடு அழிந்துவிடும். ஆகவேதான் ஓவாப்பிணி கூடாதென்ருர்.

எந்த நாட்டிற்கும் பகைவர்கள் இருப்பர். தனிமனித வளர்ச்சியில்கூட பொருமையும், சிறுபகையும் எழும்போது ஒரு நாட்டிற்குப் பகை இருப்பது தவிர்க்க முடியாதது. நாட்டிற்குப் பகை உள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் வரும். அழிவு செய்யும் பகையிருந்தால் வளமான நாடும் பாழாகும்; சிறுபகை இருந்தால்தான் நாட்டில் மக்கள் மனம் கோணுது ஆட்சி நடப்பதற்கு வழிவகுக்கும். அது எதிர்க்கட்சி போன்றது. ஆளுகின்றவர் தம்மைப் பகைவர் கள் வென்றுவிடக்கூடாது என்பதற்காகவேனும் மக்கட் குத் தம்மால் இயன்ற நன்மைகளை விரைந்து செய்து மகிழ்விப்பர். ஆகவே சிறுபகை வேண்டுமேயன்றி மக்களை யும் நாட்டையும் அழிக்கும் செறுபகை கூடாதென்கிருர். இவ்வாறு அடைகளைக்கூட அளந்துபோட்டு பொருள் கூட்டும் வள்ளுவத்தில் ஆடூஉ முன்னிலை மகடூஉ முன்னிலை சொற்கூட்டங்கள் வராத்தல் வியப்பில்லை.

திருக்குறள், ''தம்மிற் றம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து, மன்னுயிர்க் கெல்லா மினிது'' என்று பறை சாற்றுகிறது. தலைமுறைக்குத் தலைமுறை அறிவு இயல்பாக வளரவேண்டும் எனும் உயர் குறிக்கோள் இதில் தெளி

வாக்கப்படுகிறது ஏனெனில், மகன் தந்தையின் காலத்தில் உலக அறிவையும், தந்தைக்கும், மகனுக்கும் இடையிலுள்ள ஒரு தலைமுறையின் அறிவு வளர்ச்சியையும் சேர்த்துப் பெற்றுவிடுகிறான். ஆகவே தந்தையைவிட மகன் அதிக அறிவு பெறுவது உலக உயிரனைத்தும் இனிதாகப் போற்றும் ஒன்றெனமகிழ்கிறார். ஆனால் நாலடியாரில், 'மகனறிவு தந்தையறிவு' என்கிறார் ஆசிரியர். அவர் அதற்குக் கையாளும் உவமை நோக்கற்குரியது. வயலில் செந்நெல் வித்திட்டால் செந்நெல்லேவிளையும்' அதுபோன்று மகனின் அறிவும் தந்தையின் அறிவின் அளவேயாம் என்கிறார். அவர் கூறும் அதே உவமையை இன்னும் சற்று நுணுகிப் பார்த்தால் அது வள்ளுவர் கருத்திற்கே அணைகட்டி நிற்பதைக் காணலாம். ஏனெனில் ஒரு நெல்லில் இருந்து விளைவது ஒரு நெல் மட்டுமல்ல. ஒரு நெல்லில் இருந்து முளைக்கும் பயிர், உயிரைத் தாய்நெல்லில் பெற்று, உரத்தையும், நீரையும் சுற்றுப்புறச் சூழலில் பெற்று வளர்ந்து ஒன்றுக்குப் பத்தாகப் பயன் தருகிறது. அதுபோல் தந்தையைவிட மகன் அறிவால் மேம்பட்டவனாக இருத்தல்வேண்டும். அதுவே இயற்கை என்பதனை

''செந்நெல்லாய செழுமுளை மற்றுமச்
செந்நெல்லேயாகி விளைதலால் – அந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவயலூர
மகனறிவு தந்தை யறிவு'' எனவும் கொள்ளலாம்.

பெரியாரைத் துணைக்கோடல் சிற்றினஞ்சேராமை எனும் இரண்டதிகாரங்களில் ஒருவன் தான்சார்ந்திருக்கும் இனத்தைப் போன்றே ஆவான் என்று வள்ளுவர் வலியுறுத்துகின்றார். ''மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் இனந்தூய்மை தூவா வரும்'' என்றெல்லாம் இனத்தினியல்பு மன மொழி மெய்களைப் பாதிக்கும் என்று கூறிய வள்ளுவர்,

''நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்பதாகு மறிவு'' என்கிறார்,

நிலத்திற்கேற்ப நீர் ஊறும்; நீர்மாறும்; சுவை மாறும். அதுபோன்று இனத்திற்கேற்ப நம்மனத்தில் பல கருத்துக்கள் ஊறும்; சொற்கள் மாறும்; செயல்கள் வேறுபடும். இச்சிந்தனைப் போக்கினை எதிர்த்து நாலடியாரில்,

"கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கும் மலைசார்ந்தும்
உப்பீண்டு உவரி பிறத்தலால் தத்தம்
இனத்தனைய ரல்லர் எறிகடல் தண்சேர்ப்ப
மனத்தனைய மக்களென்பார்" எனக் காண்கிறோம்.

'இனத் தனையார் மக்களாவார்' எனும் குறட் கருத்தை ஏற்காதவர் போல் நாலடியாசிரியர், "மனத்தனையர் மக்களன்பார்" எனக் கூறுகிறார். கருத்தில் மட்டும் மாறுபாடடையாமல் சொல்லும் உவமையிலும் வேறுபடுகிறார். "நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும்" என்பதனை எதிர்த்துக் கடற்கரையிலும் நன்னீர் உண்டு, மலைப்பக்கலிலும் உவர் நீர் உண்டு என்கிறார். நாலடியார், 'உவர் மண்ணில் நன்னீரும், நன்மண்ணில் உவர்நீரும் வருவது இயற்கை: ஆகவே நிலத்தியல்பால் நீர் திரிவதில்லை' என்று மறுக்கிறது.

இதனை வலியுறுத்த, கெட்ட இனத்தாலும் மனந் தூயார் கெடமாட்டார் என மற்றோர் இடத்தும் கூறுவார். இதனை விளக்க வேறொரு உவமையையும் கையாள்கிறார்.

"வேம்பினிலையுட் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம்"

கசப்பான வேப்பிலையை வாழைக்காய் கனியப் பயன் படுத்துகிறோம். வாழை, வேம்பின் கசப்பிலையையும் தான் சுவை நிறையும்படிப் பயன்படுத்திக் கொள்கிறது. அது போல் நல்லவர்கள் கெட்டவர்களுடன் சேரினும் தாம் முன்னேறிச் சிறக்கவே அவர்களைப் பயன்படுத்துவர். ஆகவே, 'இனத்துளதாகும் அறிவு' எனும் குறட்கருத்தை 'மனத்தனையார் மக்கள் என்பார்'. எனும் நாலடித்தொடர் ஏற்கவில்லை என்று தெரிகிறது. உவமையிலும் கருத்திலும் இருநூலுக்குமிடையே வேற்றுமை இருப்பதை நாம் காண்கிறோம்.

தென்னாட்டவர் துறக்கம் புகமாட்டார் எனும் கருத்து சமணம் புகுந்த காலத்தில் எழுந்த ஒன்றாகும். சேனாவரையரது உரையின் ஒரு பகுதியிலும் இக்கருத்து காணப்படுகிறது. முயன்று அறஞ்செய்தால் தென்னாட்டவரும் மேல் உலகம் புகலாம். வடவரிலும் பலர் மேலுலகம் செல்ல முயலாது வீணாகக் காலம் கழிப்பதும் உண்டு.

"எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னாட்டவரும் சுவர்க்கம் புகுதலால்
தன்னால்தானாகும் மறுமை வடதிசையும்
கொன்னாளர் சாலப் பலர்".

துறக்கம் புகுவதில் தென்னாட்டார் வடநாட்டார் என்ற வேற்றுமையை ஏற்றுக்கொண்டு ஆசிரியர் அதற்குக் கருவாய் கூறுகிறார். வள்ளுவரிடத்து இக்கருத்தைக் காண்டலரிது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்றும்

'யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகும்' என்றும் மக்களின் உள்ள உணர்வுகளுக்கு ஏற்ப செய்யும் செயல்களுக்கேற்ப மேலுலகம் கிடைக்கும் என்றும் எல்லோர்க்கும் பொதுவான கருத்துக்களையே கூறினார். இவ்வாறு துறக்கம் புகுதல் மற்றிய கருத்திலும் நாலும் இரண்டும் வேறுபடுதலைக் காண்கிறோம்.

நால்வகைச் சாதிமுறை சங்க காலத்திலேயே தமிழகத்தில் வேரூன்றி விட்டது. 'மேற்பால், கீழ்ப்பால்' என்று குறிப்பிடும் அளவு சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் உண்டாயின. நாலடியார் காலத்தில் இக்கருத்துக்கள் சமயத்தோடு தொடர்புபடலாயின. சில தொழில் செய்யும் இனத்தவருக்குச் சமுதாயத்தில் ஏற்றமும் மற்றையோருக்கு இழிவும் வற்பட்டிருந்தன. அன்பற்ற மனமுடைய பொதுமகளிர்க்குப் பொருளற்றார் நஞ்சு போன்றார். செக்கினை ஆட்டி, அதனால் வந்த பொருளையுடையாரயானாலும் அவர்கள் அம்மகளிருக்கு வெல்லமாவார் என்பது நாலடியாரின் கருத்து. ஊன்றி நோக்குமிடத்து, செக்காட்டுதலை இழிதொழில் என்று ஆசிரியர் கருதுகிறார் எனத்தோன்றுகிறது. தொழில் அடிப்படையில் மக்களிடையே தோன்றிய வேறுபாடுகள் இயற்கை, ஆனால் அவ்வேறுபாடுகளில் ஏற்றத் தாழ்வுகள் கற்பித்தது செயற்கை. நாலடியில் இவ்விரண்டினையும் காண்கிறோம்.

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" எனக்

கூறுகிறது வள்ளுவம். செய்தொழிலில் இழிவு நாட்டிய நாலடியினின்றும் குறள் வேறுபட்ட நிலையை இது காட்டுகிறது.

குறிப்பிட்ட கருத்தினை உவமைகள் வாயிலாக விளக்குவதில் குறளும் நாலடியும் வேறுபட்டுள்ளன. உயர்ந்த கருத்துக்களை உயர்ந்த உவமங்களாலும் இழிந்த பொருளை இழிந்த உவமத்தாலும் விளக்குவது வள்ளுவரின் சிறப்பு. ஒழுக்கம் உயர்ந்தது; சிறந்தது; ஆகவே அதனை உயர்ந்த பொருளான உயிரோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"
இழிந்த பொருளிற்கு இழிந்த பொருளையே உவமையாக்கு கிறார்.

பொருட்பெண்டிர் தொடர்பு தீயது வாழ்க்கையைச் சிதைக்கக்கூடியது என்று பொருட்பெண்டிர் தொடர்பினை கண்டித்துக் கூறும் வள்ளுவர், இழிந்த பிணத்தை உவமை யாக்கிக் காட்டுகிறார்.

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம் தழீ இயற்று" என்கிறார்.
ஒழுக்கத்தை உயிர் என்றவர் பொருட்பெண்டிரைப் பிணம் என்கிறார். ஆனால் நாலடியில் நாம் காணும் உவமை ஒன்று வியப்பாக இருக்கிறது. நூலைப் பொதுமகளிருக்கும், நூலின் நுண்பொருளைப் பொதுமகளிர் உள்ளத்திற்கும் உவமையாக்கிக் காட்டும் முறை வியப்பிலாழ்த்துகிறது.

"பெறுவது கொள்பவர் தோள்போல் நெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லாம் எளியநூல்-மற்றம்
முறிபுரை மேனியர் உள்ளம்போல் யார்க்கும்
அறிதற்கரிய பொருள்".
பொருட்பெண்டிரைப் பிணத்திற்கு உவமையாக்குகிறது குறள்; அவரை அறிவுதரும் நூலுக்கு உவமையாக்குகிறது நாலடி. உயர்ந்த பொருளுக்கு இழிந்த பொருளை உவமை யாக்கும் போக்கினை நாலடியில் இவ்வோரிடத்தில் மட்டுமே

காண்கிறோம். இவ்வாறு நாலடி உவமை கூறும் வகையிலும் குறளிலிருந்து வேறுபடுவதைக் காண்கிறோம்.

இதுகாறும் கூறியவற்றால் நாலும் இரண்டும் சிற்சில இடங்களில் அமைப்பிலும், கருத்திலும், கருத்துக்களைக் கூறும் முறையிலும், உவமைகள் கூறும் வகையிலும், மேலுலகத்தைப் பற்றிய சிந்தனையிலும், இவ்வுலக சாதிப் பிரிவுகளிலும் பெண்டிரைப் பற்றிய எண்ணப்போக்கிலும், காதலைப்பற்றிய கருத்திலும் இன்னும் பிறவற்றிலும் ஒன்றோடொன்று வேற்றுமைப்படுகின்றன என்றும் அறிகிறோம். இந்த வேற்றுமைகள் அந்நூல் இரண்டிற்கும் இடையேயுள்ள எத்தனையோ ஒற்றுமைகளை மறைத்தவையாகிவிடாதா என்று அஞ்சவேண்டியதும் இல்லை. இவ் வேற்றுமைகள் அவ்விரு நூல்களில் தனித்தன்மைகளை மிக உயர்த்திக் காட்டுவனவாகவே அமைந்துள்ளன.

## நூல் மதிப்புரை

**குபரகுருபரன்!**

**தைத்திங்கள் ஆண்டுமலர்! விலை 37 பைசாக்கள்**

சைவ, சமய வளர்ச்சிக் கட்டுரைகளடங்கிய சிறுநூல். மேதகு. பாலகவி இராமநாதஞ்செட்டியார், திருமுருக. கிருபானந்த வாரியார் போன்ற பலரின் எழுத்தோவியங்கள் அழகுபடுத்துகின்றன இம் மலரை.

இலக்கிய, சமய வளர்ச்சிகளைப் பேணுவதையே தன் குறிக்கோளாகக் கொண்டு விளங்கினால் ஆக்கமும், ஊக்கமும், அளித்துப் போற்றுவர்.

பதிப்பாசிரியர்,

**ஆ. ஆண்டியப்பன்.**

# நூல் மதிப்புரை

## பிழையின்றி எழுதுங்கள்!

ஆசிரியர்:புலவர். திருமிகு. மு வை. அரவிந்தன் எம்.ஓ எல்.
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி,
வேலூர்—2.

**விலை. உரூபா. 1**

தமிழ் வளர்ப்போம் என்ற தலைப்பில் 18 கட்டுரைகளடங்கிய அரிய, சிறிய நூல், பல்வேறு துறைகள் தோறும் தமிழ் மணம் வீசிவரும் இற்றைய நாளில் பிழைகளும் பெருகி வருகின்றன என்பது மறுக்கவொண்ணுதாகும்.

எனவே பிழைகள் நீங்கிட, நல்லதமிழ் செழித்திட, நாடெங்கும் முத்தமிழ் முழங்கிட ஓரளவு துணை புரியுமாறு அமைந்துள்ளது இந்நூல்.

''பதினைந்து ஆண்டுகளாகத் தமிழ்க் கற்றும், கற்பித்தும் வருவதால் ஏற்பட்டுள்ள அனுபவத்தைக் கொண்டு எழுதப்பட்டது இந்நூல்'' என்ற ஆசிரியரின் சீரிய கருத்துக்கள் பொருத்த முடைத்து.

பிள்ளைப் பாண்டியனார், வில்லிபுத்தூரார் போன்ற நுண்மாண் நுழை புலம்படைத்தோர் இல்லாத இக்காலத்திலே இத்தகைய நூற்கள் வெளிவருவது வரவேற்கத் தக்கது.

பதிப்பாசிரியர்,
ஆ. ஆண்டியப்பன்

---

# இரங்கற் பாக்கள்

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்
போற்பிரசங் கஞ்செய் வாய்மை
சிறந்தபாண் டித்துரையே பொன்னுச்சா
மிப் பெரியோன் சேயே நீயின்
றிறந்தமா துயர்க்கடிதங் கொடுமை தோய்த்
தெழுதியதீங் கெய்திற் றென்னே
திறந்தபோழ் தேகண்ணீ ராறு துக்கக்
கடலீர்த்துச் சேர்த்த தந்தோ.

—●—

தாயில்லாச் சங்கடஞ்சூ ழிளங்குழவி
போற்றமிழ்தத் தனிக்கக் காத்தாய்
நீயில்லாச் சங்கமினி யெவ்வாறு
நகருறுமோ நெடுஞா லந்தான்
வாயில்லாச் சங்கமென மதித் தொருகா
லொதுக்கிடுமோ வளர்ப்பார் யாரோ
நோயில்லாச் சங்கரன்ரு ளேபோற்றும்
பாண்டிமன்ன நுவல்வா யந்தோ.

—●—

பொன்னையநண் பனையிழந்தோம் பாற்கரவேந்
தனையிழந்தோம் பொருவில் கல்விச்
சின்னையநண் பனையிழந்தோ மரங்கநா
தப்பெயர்கொள் சிறந்த வாய்மை
முன்னையநண் பனையிழந்தோ மமையாதே
பாண்டிமன்ன முடிவில் கீர்த்தி
நன்னையநண் பனையிழந்தோ மென்னவுமா
யிற்றந்தோ நாவலீரே.

(மேதகு. வயி. நாக. அ. இராமநாதச் செட்டியாரவர்களால் பாடப்பட்டது) (செ. தொகுதி-10)

(தொகுப்பு- ஆ. ஆ.)

# தமிழ்ப் பழஞ்சரிதை

திராவிட தேசம் மென்பன: கருநாடகம், தமிழகம், ஆந்திரம், கன்னடம், மகாராஷ்டிரம், கூர்ச்சரம் மென்பன. இவற்றுள் கூர்ச்சரம் மகாராஷ்டிரமென்னும் இரண்டும், முன்னாளில் ''வேள்புலம்'' என்னுந்தமிழ்ப்பெயர் பெற்றிருந்தன.

பழங்காலத்தே திராவிடரெல்லாம் ஒரே மக்களாய் ஒரே மொழியை வழங்கினராயினும் காலாந்தரத்தில் அவர் மொழி தெலுங்கு, கன்னடம், மலையாளந்துளு எனச்சில வேற்றுமை பெற்றுப் பிரிவுலாயின. ஆயினும, அவை தமிழின் உருவத்தையே தம் ஆதியுருவமாகக் கொண்டுள்ளன.

— பொ. பாண்டித்துரைத்தேவர்

(தொகுப்பு: ஆ. ஆ)

---



புறநானூற்று வீரத்திற்குச் சான்று கூறும்வண்ணம் இருபதாம் நூற்றுண்டிலே வாழ்ந்து, ஆயிரமாயிரம் மக்கள் வியத்தகு முறையிலே புதுமையான பொருளுரைகளும், அருளுரைகளும் வழங்கிய தெய்வீகத் திருமகனர் தேவர் பெருமகனர் நினைவுக் கல்லூரிப் பேராசிரியர் கு. துரைராசு எம். ஏ. அவர்களுக்குப் பொன்னுடை போர்த்துகிறுர் ஆட்சிக்குழு உறுப்பினர் ஆண்டியப்பனர்.

# தமிழ்க்கிளவி

இரா. கோதண்டராமன் எம். ஏ. (தமிழ்) எம். ஏ.
(மொழியியல்) அண்ணாமலை பல்கலைக் கழகம்

தொகுதி 67 பகுதி 4 தொடர்ச்சி

நிழறிகழ் < ❊ நிழன்றிகழ் < ❊ நிழன் திகழ் ❊ நிழன்
❊ நிழன்ம் < ❊ நிழல்ம் < ❊ நிழல் - உம்

கடனூர்க்குவன் < ❊ கடன்னூர்க்குவன் < ❊ கடன் தூர்க்குவன்
❊ கடன் < ❊ கடன்ம் < கடல்ம் < ❊ கடல்—உம்.

ஞாயிறொறும் < ❊ ஞாயின்றொறும் < ❊ ஞாயின்தொறும்
❊ ஞாயின் < ❊ ஞாயின்ம் < ❊ ஞாயில்ம் < ❊ ஞாயில்—உம்

காறிருத்தி < ❊ கான்றிருத்தி <❊ கான் திருத்தி ❊கான்
❊ கான்ம் < ❊ கால்ம் < ❊ கால்—உம்

நுதறுடைத்து ⊲ ❊ நுதன்றுடைத்து ⊲ ❊ நுதன் துடைத்து
❊ நுதன் ⊲ ❊ நுதன்ம் ⊲ ❊ நுதல்ம் ⊲ * நுதல் —உம்

ஆ. தோடாழ் < ❊ தோண்டாழ் ⊲ தோண்தாழ்.
❊தோண்ட ⊲ ❊தோண்ம் ⊲❊ தோள்ம் ⊲ ❊தோள்-உம்

மாக்கடொழுது ⊲ ❊ மாக்கண்டொழுது ⊲ ❊மாக்கண் தொழுது
*மாக்கண் ⊲ * மாக்கண்ம் ⊲ * மாக்கள்ம் ⊲ * மாக்கள்—உம்

துகடீர்ந்து ⊲ * துகண்டீர்ந்து ⊲ * துகண் தீர்ந்து * துகண்
* துகண்ம் ⊲ * துகள்ம் ⊲ * துகள்—உம்

இருடூங்கும் ⊲ * இருண்டூங்கும் ⊲ * இருண் தூங்கும்.
* இருண் < * இருள்ம் < * இருள்—உம்

ஏனைய இரண்டனுக்கும் இவ்வாறே கொள்க. இதே போக்கில் சங்கப் பாடல்களில் நிகழ்வு அல்லது எதிர்வுப் பொருண்மையை உணர்த்தும் சேறும் (நற்றிணை 156.5) சேறி [ஷை 126.11) அகறிர் [ஷை 37.7] முயறி [கலித்தொகை 17.10] போறி [ஷை 144.26] ஆகிய வினைமுற்றுக்களையும் பின் வருமாறு ஆராயலாம்.

சேறும் < * சேன்றும் < * சேன்தும் < * சேன்து-உம்
* சேன்து < * சேன்ம்து < * சேல்ம்-து
* சேல்ம் < * சேல்—உம்.

சேறி < * சேன்றி < * சேன்தி < * சேன்று-இ-ஷி

அகறிர் < * அகன்றிர் < * அகன்திர் < * அகன்து இர்
* அகன்து < * அகன்ம்—து. * அகன்ம் <
அகல்ம் < * அகல்—உம்.

முயறி < * முயன்றி < * முயன்தி < * முயன்து—இ
* முயன்து < * முயன்ம்—து. * முயன்ம் <
முயல்ம் < * முயல்—உம்.

போறி < * போன்றி < * போன்தி < * போன்து-இ
* போன்து < * போன்ம்—து. * போன்ம்
< * போல்ம் < * போல்—உம்

இவ்வாறே **கோறல்** (குறள் 321) 'கொல்லுதல்' **வேறல்** [புறம் 45. 6] 'வெல்லுதல்' ஆகிய சொற்களையும் ஆராயலாம்.

கோறல் < * கோன்றல் * கோன்று—அல். * கோன்று
< * கோன்து < * கோன்ம்—து. * கோன்ம் < *
கோல்ம் < * கோல்—உம் 1

வேறல் < * வேன்றல் < * வேன்று-அல். * வேன்று < *
வேன்து < * வேன்ம்—து. * வேன்ம் < *
வேல்ம் < * வேல்—உம் 1

---

1. இவ் ஆய்வினின்றும் **கொல் வெல்** ஆகிய வினைகள் * **கோல்** * **வேல்** என உயிர் நீண்டு வழங்கிய நிலை ஒன்று இருந்தமை புலனாகின்றது.

2. இந்நிலை பொதுவாகத் தமிழகத்தின் வடமாவட்டங்களில் வழங்கும் பேச்சுத் தமிழில் காணப்படுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டப் பகுதியைச் சார்ந்த இக்கட்டுரையாளரின் பேச்சுத் தமிழில் இந்நிலை காணப்படுகின்றது.

**துயிறுறந்து** 'துயில்துறந்து', **துகடீர்ந்து** 'துகள் தீர்ந்து' போன்று புணரந்தமைந்த தொடர்கள் சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படுகின்ற. இத்தகைய தொடர்களில் சங்க இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் தான் மெல்லொலி வீழ்ச்சி நிகழ்ந்தது என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. சங்க இலக்கியங்கள் தோன்றுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே வல்லொலி முன் நிகழ்ந்த மெல்லொலி வீழ்ந்துபட்டு அவ் உண்மைகாலப் போக்கில் மறக்கப்பட்டிருக்கலாம். அந்நிலையில் லகர ளகரங்கள் தகரத்துடன் புணர்ந்து முறையே றகர டகரங்களாகவும் அமையற்பாலன எனக் கருதும் போக்கு சங்க இலக்கியங்களும், பிற்கால இலக்கியங்களும் தோன்றியபோது நிலைபெற்று விட்டது என்று கருதலாம். வரலாற்று உண்மைகள் மறக்கப்படும் போது மொழியில் எங்ஙனம் இசைகேடான புணர்ச்சி நிலைகள் இடம்பெறுகின்றன என்பதற்கு **துயிறுறந்து, துகடீர்ந்து** போன்ற தொடர்கள் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

**துயிறுறந்து, துகடீர்ந்து** போன்ற தொடர்களின் உருவமைகப் பெற்ற வடிவங்களில் பெயரை அடுத்து உம்மைக்கிளவி [*துயில்—உம். *துகள்--உம்] நிகழ்வதாக மேலே குறிக்கப் பெற்றுள்ளது. இன்றும் பேச்சுத் தமிழில் பெயர்கள் பன்மைப் பொருண்மையை உணர்த்தும் போது உம்மைக்கிளவி பெயர்களை அடுத்து நிகழும் நிலைகாணப்படுகின்றது[2]. பின்வரும் எடுத்துக் காட்டுக்கள் இதனைப் புலப்படுத்தும்.

காலுங்க (< ? * காலுங்கள்) 'கால்கள்' (கால்-உம்-)
ஆளுங்க (< ? * ஆளுங்கள்) 'ஆட்கள்' (ஆள்-உம்-)
நாயுங்க (< ? * நாயுங்க) 'நாய்கள்' (நாய்—உம்—)
ஊருங்க (< ? * ஊருங்கள்) 'ஊர்கள்' (ஊர்—உம்–)
செடிங்க (< ? * செடிங்கள்) 'செடிகள்'. (* செடிம் < * செடிய்ம் < * செடிய்—உம்—)
மாடுங்க (< ? * மாடுங்கள்) 'மாடுகள்' (மாடு-உம்-)

தமிழில் உம்மைக்கிளவியின் நிகழ்ச்சி மிகுந்த ஆற்றலுடன், பெயர், வினை மற்றும் பெயரடை ஆகிய பகுதிகளை அடுத்து காணப்படுகின்றது. பெயரடைப் பகுதிகளை

அடுத்து உம்மைக்கிளவி நிகழும் போக்கைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

கருங்கூந்தல் (கரும் < * கர்—உம்)
பெருந்தலைவர் (பெரும் < * பெர்—உம்)
கொடுங்கோல் (கொடும் < * கொடு—உம்)
[* கொடு- < * கொண்டு]
நெடுந்தொலைவு (நெடும் < * நெடு—உம்)
* நெடு < * நெண்டு)
குறுந்தொகை (குறும் < * குறு—உம்)
(* குறு < * குன்று)
அருங்கலை [அரும் < * அர்—உம்]

இதனை அடியொற்றி வெண்குடை, செந்தளிர், நன்செய் புன்செய், வன்சொல், மென்றொடர், வண்புகழ் தெண்டிரை (தெண்திரை), பைங்கொடி போன்ற தொடர்களில் அமைந்துள்ள வெண், செம், நன், புன், வன், மென், வண், தெண், பைம் ஆகிய பெயரடைகளைப் பின் வருமாறு ஆராயலாம்.

வெண் < * வெண்ம் < * வெள்ம் < * வெள்—உம்
செம் < * செய்ம் < * செய்—உம்
நன் < * நன்ம் < நல்ம் < * நல் – உம்
புன் < * புன்ம் < புல்ம் < * புல்—உம்
வன் < * வன்ம் < * வல்ம் < * வல்—உம்
மென் < * மென்ம் < * மெல்ம் < * மெல்—உம்
வண் < * வண்ம் < * வள்ம் < * வள்—உம்
தெண் < * தெண்ம் < * தெள்ம் < * தெள்—உம்
பைம் < * பய்ம் < * பய் – உம்

இவ் ஆய்வு மையீற்றனவாகக் கருதப்பெறும் பண்புப் பெயர்களின் வரலாற்று அமைப்பைத் தெளிவு படுத்துவதாக அமைகின்றது. இவ் ஆய்வின் அடிப்படையில் மையீற்றுப் பெயர்கள் அனைத்தும் **பகுதி + உம் + அய்** (> ஐ) என்ற அமைப்பினவாகக் கருதப்பெறும்.

எ-டு. உண்மை < * உண்மய் < உண்ம்-அய், * உண்ம்- < * உள்ம்- < உள் — உம்

வினையடிகளை அடுத்து உம்மைக்கிளவி நிகழும் நிலை **செய்யும்** வாய்பாட்டு வினைகளில் காணப்படுகின்றது. வினைத் தொகைகளின் நிலைமொழிகள் தொடக்கத்தில் செய்யும் வாய்பாட்டினவாகவே அமைந்திருக்கவேண்டும் என்பது பின்வரும் தொடர்களின் மீது அமைந்த ஆய்வின் மூலம் புலனாகும்.

1. இயறேர் (பத்துப்பாட்டு 3. 49) 'இயல்—தேர்'
இயறேர் < ❊ இயன்றேர் < ❊ இயன்வேர். ❊ இயன்
< ❊ இயன்ம் < ❊ இயல்ம் < இயல் -உம்.

2. வின்னவிறடக்கை (ஷை 10 63) 'வில்—நவில்—தடக்கை.
-நவிறடக்கை < ❊ நவின்றடக்கை <❊ நவின்தடக்கை.
❊ நவின் < ❊ நவின்ம் < ❊ நவில்ம் < ❊ நவில்—உம்.

3. திரடோள் [ஷை 10. 57] 'திரள்—தோள்'
திரடோள் < ❊ திரண்டோள் < ❊ திரண்தோள்.
❊ திரண்ட < ❊ திரண்ம் < திரள்ம் < ❊ திரள்—உம்.

4. கணங்கொடோகை [ஷை 10.44] 'கணம்-கொள்-தோகை'
—கொடோகை < ❊ கொண்டோகை < ❊ கொண் தோகை
❊ கொண்- < * கொண்ம் < ❊ கொள்ம் < ❊ கொள் —உம்.

வினைத் தொகையாக அமைந்த இத்தொடர்கள் அனைத்திலும் உருவமைக்கப் பெற்ற வடிவங்களில் நிலைமொழிகள் **செய்யும்** வாய்பாட்டினவாக அமைதலைக் காணலாம். சங்க இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் இத்தகைய தொடர்களிலும் வல்லொலிமுன் மெல்லொலி நிகழ்ந்திருக்குமென்று தோன்றவில்லை. லகரமும் தகரமும் ளகரமும் தகரமும் சேர்ந்து எங்ஙனம் முறையே றகரமாகவும், டகரமாகவும் மயங்கின என்பதற்குச் சற்று முன்னர் [ துபிறுறந்து, துகஉர்ந்து ] கூறிய விளக்கமே மேற்படி வினைத்தொகைத் தொடர்களுக்கும் பொருந்தும்.

இக்கட்டுரையில் வல்லொலிகளின்முன் நிகழும் மெல்லொலிகளும், தண், வெண், செம், வன், மென் போன்ற பெயரடைகளின் ஈற்றில் நிகழும் மெல்லொலிகளும். மையீற்றுச் சொற்களில் நிகழும் மகரமும் உம்மைக்கிள

MAHAMAHOPADHYAYA

வியின் சிதைவாகக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறே—மன், —மார் போன்ற இசைச் சொற்களில் அமையும் மகரமும் உம்மைக்கிளவியின் சிதைவாகக் கொள்ளத்தக்கதாகும் (மன் < ✻ -உம்-அன், -மார் < ✻ - உம்-ஆர்) இவ்வாறு உம்மைக்கிளவியை சொல்லாய்வுக்கு அடிப்படையாக அமைத்துக் கொண்டதற்குக் காரணம் அது பல்வேறு சொல்லமைப்புக்களில் நிகழ்வது பற்றியேயாகும். உம்மைக்கிளவி அமைந்த சொல்லமைப்புக்களில் பெரும்பாலானவை வினைகளாகவும், ஏனையவை பெயர்களாகவும் பெயரடைகளாகவும். வினையடைகளாகவும் அமைந்து இயல்கின்றன.

எ—டு. 1] **வினையமைப்புக்கள்: செய்யும், செய்தும். செய்யவும். செய்தாலும். செய்ததும்** போன்ற வாய்பாட்டு வினைகள். மாடு புல் **தின்னும்.,** கண்ணன் **உண்டும் உறங்கியும்** காலம் கழித்தான்., கண்ணன் **வந்தும்** மணியன் வரவில்லை., கண்ணன் **பேசவும் எழுதவும்** பழகினன்., கண்ணன் **வரவும்** மணியன் **போகவும்** சரியாக இருந்தது.. நீ உடனே **வரவும்.,** கண்ணன் **வந்தாலும்** வருவான், கண்ணன் **வந்தாலும்** வேலைகிடைக்காது., கண்ணன் **வந்ததும்** மணியன் சென்றான்.

2) **பெயர்கள்: கண்ணனும் மணியனும்** வந்தார்கள்., **கண்ணனும்** வருவான்., **பத்தும் பத்தும்** இருபது **ஆளுங்க** 'ஆட்கள்' [ < ஆள்—உம்— ]., கண்ணன் ராமன் **இருவரும்** வந்தனர்., **எல்லோரும்** வந்தனர்., **அனைவரும்** வந்தனர், **அனைத்தும்** வந்தன., **யாரும்** வரவில்லை., **யாரும்** வரலாம்., **யாரேனும்** வரலாம்., **ஏதும்** இல்லை, **எதுவும்** நடக்கலாம்;

3) **பெயரடைகள்: அரும், பெரும், கரும், நெடும்;**

4] **பிற:** பெரிதும் மகிழ்ந்தான்., **சிறிதும்** வருந்தவில்லை, **மிகவும்** வருந்தினர்., **மேலும்** சொன்னர்., **முழுதும்** கொடுத்தார், **இன்னும்** கேட்டார்., **மீண்டும்** வந்தார்., கண்ணன் ராமன் **மற்றும்** மணியன் ஆகியோர் வந்தனர். **முற்றும்** துறந்தார்., **பெரும்பாலும்** வரலாம்.

MAHAMAHOPADHYAYA

மேலே உம்மைக்கிளவி நிகழும் சொல்லமைப்புக்கள் சிலவே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. பல்வேறு வகையான சொல்லமைப்புக்களிலும் உம்மைக்கிளவி பயின்று வழங்குவதை நோக்கும்போது தொடக்கத்தில் இவ் இடைச் சொல் சொற்களை அமைத்துக் கொள்வதற்குரிய ஒரு சிறந்த கருவியாகத் திகழ்ந்திருக்கவேண்டும் என்று எண்ணத் தோன்றுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டே இக்கட்டுரையில் சொல்லமைப்புக்களை ஆராய்வதற்கு ஏற்ற கருவியாக உம்மைக்கிளவி பயன் படுத்திக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

## நூல் மதிப்புரை

### கன்னிப்பாவை

வித்துவான். சே. சேசுராசா எம். ஏ., பி. டி.
அமெரிக்கன் கல்லூரி, மதுரை. (இரையரசன்)

'முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றுவம்" என்ற கருத்திற்கேற்ப திருப்பாவை, திருவெம்பாவை, தஞ்சைவாணன் கோவை, கலிங்கத்துப்பரணி, நம்பியகப்பொருள் ஆகிய தமிழ் நூற்களை ஆதாரமாகக் கொண்டு அழகுபட அமைந்துள்ள நூல் கன்னிப்பாவை.

"உலகின் உயிரனைத்தும் — கண்ணயர்ந் துறங்கிடும் வேளையிலே தலைவன் விழித்திருத்தல் — இத்திருத்தரணி கண்டதுண்டோ" — என்று ஆசிரியர் வினவெழுப்பியுள்ளார் தமிழ்த்தரணி கண்ட துண்டு எனக் கூறக்கடமைப் பட்டிருக்கிறோம் நாம் இது போன்ற சிற்சில கருத்து வேறுபாடுகளிருப்பினும் எழிலார்ந்த எளிமையான நடையோட்டத்திற்காகக் கவிஞரைப் பாராட்டுவது சால்புடைத்து.

கன்னிப்பாவை நூலிற்கு அணிந்துரை எழுதியுள்ள அன்பர் "காய்தல் உவத்தலின்றி ஆய்த்தல் அறிவுடையார் கண்ணேயுள" என்ற உயரிய நூல்மதிப்பீட்டினை உணராதவரோ என்று ஐயுறும்வண்ணம் வேண்டாத விரும்பாத சொற்களைப் பெய்திருப்பது இந்நூற் கவிஞருக்கு அரண் செய்தாக இல்லை; அணி செய்வதாகவுமில்லை.

ஆதாம் ஏவாள் காலத்திலிருந்தே நாத்திக ஆத்திகக் கருத்துக்கள் முகிழ்த்திருந்தன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை "எதையும் ஏன்? எதற்கு? எப்படி? என்று சிந்தனைத் தேரை இயக்கிய சாக்ரடீசு" "மூட நம்பிக்கையைச் சாடிய இங்கர்சால்" 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்" என்றியம்பிய ஆன்றோர், "நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்" என்று பாடிய சிவபாக்கியச்சித்தர் போன்றோரெல்லாம் மடமை வழிச்சென்றவர்கள் என்று நினைக்கத்தோன்றுகிறது. ஆசிரியர் கருத்துப்படி அவ்வாறு கருதுவது நெறி பிறழ்ந்தாற் கூற்றும் என்க.

பதிப்பாசிரியர்,

ஆ. ஆண்டியப்பன்.

---

## தமிழர்வீரம்

தமிழில் ஆரியரது கலப்புக்கு முன்பே, இயல் இசை கூத்து முதலிய கலைகள் செவ்வைபாக அமைந்திருந்தன, பிற்காலத்தில் அகத்தியர் அவற்றை ஆரியக்கலப்புற புனைந்தனராயினும் அதற்கு முன்பு வேறு கலப்பின்றி அவை தமிழிலிருந்தன வென்பதில் ஐயமில்லை. அகத்தியருக்கு முன்பு (குமரம்) என்னும் முத்தமிழ் இலக்கண நூல் இருந்ததென்று தெரிகிறது. இக்குமரமே அகத்தியத்திற்கு முதல் நூலாயிருந்ததென்பதற்குக் குமரக் கடவுளைச் செந்தமிழ்ப் பரவாசாரிய எனக் கொள்ளலும், அகத்தியரைக் குமரக் கடவுளது மாணாக்கரென வழங்கலும் உற்றச் சான்றாகும்.

மடிந்தவுள்ளத்தோனையும், மகப்பெறாதோனையும், மயிர்குலைந்தோனையும், அடிபின் வாங்கிய வனையும். பிறவும் இத்தன்மையுடையராயும் கொல்லாது விடுதலும், கூறி எச்சரித்தும் பொருதலும் போர் வீரர்கள் கையாண்ட வழக்கங்களாகும். இவ்வீரர்களது மகளிரும் மிக்கவரென்று புகழப்பட்டனர். '**தமிழ்ப்பழஞ்சரிதை**'

**பொ. பாண்டித்துரைத்தேவர்**

தொகுப்பு ஆ. ஆ.

## சங்கச் செய்திகள்.

(6, 7-1 73ல் நடைபெற்ற விழாத் தொடர்ச்சி)

### உளங்கனிந்த நன்றி.

''தண்டமிழ்ச் சங்கந் தன்னைமுன் னிறீஇ
பண்டுபல் புலவரை வம்மென வேற்றுக்
கொண்டுநற் ருற்றுங் குணப்பெருங் குன்றே
வேண்டிற் றெவர்க்கும் விரைந்தினி துதவும்
பாண்டித் துரையெனும் பாவலர் கோவே''!
(செ)

''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்'' முழுவதையும் அரியணை ஏறித் திருமுடி சூடித் தமிழன்னை ஆட்சிபுரிந்த சங்ககாலமாம் பொற்காலத்தைக் காணுதவரும் கண்டு களிக்கும் தன்மையில் 20-ஆம் நூற்றுண்டின் துவக்கத்திலே மீனவன் கோலோச்சிய மாடமலி கூடல்மாநகரின் கண் நான்காம் தமிழ்ச்சங்கம் என்னும் தமிழ்க்கோவில் நிறுவி காலத்திற்கும் கன்னித் தமிழுலகிற்கும் பெருமை தேடித்தந்த தண்ணுர் தமிழ்க் காவலன், பாவலன் பாண்டித்துரைத்தேவரவர்கள்.

தென்னம் பொருப்பன் நன்னுட்டுள் வாழ்ந்த தெள்ளுதமிழ்ப் புலவரின் நெஞ்சையெல்லாம் அள்ளித்திறை கொண்ட பண்பாலன்; நாடாளும் நற்றிறன் மட்டுமின்றி ஏடாளும் எண்ணமாண்ட ஏந்தல், கேட்பவருள்ளம் வேட்புறப் பிணிக்கும் வியன்மாண்பும், மொழிநயத்தால் பகைவரும் மகிழ்ந்து புகழ் வியந்துபோற்றும் சொல்வலி பெற்று பாண்டித்துரையென்னும் திருநாமம் பெற்றவர்.

அத்திருமகனரின் 105வது ஆண்டு நிறைவு விழா வள்ளுவர் 2004 ஆம் ஆண்டு பரிதாபி மார்கழித் திங்கள் 23, 24 (6, 7—1—73) ஆகிய இரு நாட்களிலும் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்ச்சங்கம் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் முத்தமிழ்க் கலை அரங்கில்.

தமிழுக்கு, தமிழன்னைக்குச் சிறப்புச் செய்யும் இத்தமிழ்த் திருவிழா 6-1-73ஆம் நாள் மாலை 6 மணியளவில் தொடங்கியது. தனித்தமிழால் உணர்வூட்டும் அறிவூற்றுக் கால்வாய் நான்காம் தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் மேதகு. இரெ. செல்லத்தேவர் பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமை ஏற்றார்கள். சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் மேதகு, டாக்டர், மே. சுந்தரம் எம். ஏ. எம். லிட்; பி. எச்டி அவர்கள் விழாவினைத் தொடக்கி வைத்து அரிய சொற்பொழிவாற்றனர். மேதகு. பண்டித. மீ. கந்தசாமிப் புலவரவர்கள் தமக்கே உரித்தான இனிய நகைச்சுவையோடு சிறப்புரை யாற்றினார்கள்.

7—1—73 ஆம்நாள்காலை 10மணியளவில் பாண்டித்துரைத்தேவர் மாளிகையில் பாமாலை கவியரங்கம் விழாத் தொடங்கியது. அறிவும், திருவும் அமைந்த கரந்தைப் புலவர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் மேதகு புலவரேறு. ச. பாலசுந்தரம் அவர்கள் தலைமை ஏற்றார்கள். கலகலவென தமிழொலி கமழ்கின்ற கவிதைகளைப் பொல, பொலவெனப் பெய்தனர் கவிஞர் பெருமக்கள் அறுவர். மேதகு. இரா இளங்குமரன்; ப சங்கரலிங்கம்; மு. உலகநாதன்; புலவர்மணி. தி. கி. சுந்தரமூர்த்தி; சி. இராமசாமியார்; தமிழ்நாவலர். சி. அரசப்பனார் ஆகியோர்களுக்கு எங்காளும் நன்றி செலுத்துகிறோம்.

கன்னித்தமிழ் இன்னிசைக் கவிதைகளைச் சுவைத்த பேரவைப் பெரியோர்கள் வாழ்க! வளர்க! பாண்டித்துரைத் தேவர் திருநாமம் என்று வாயார வாழ்த்தினர்.

மாலை 6மணியளவில் மீண்டும் விழாத்தொடங்கியது எரிகதிர் திலகமாம் இருபதாம் நூற்றாண்டுத் தொல்காப்பியனார், சி. இலக்குவனார் எம்.ஏ; எம். ஓ. எல்; பி. எச்டி. அவர்கள் தலைமை ஏற்றார்கள். பழம்பொருள் ஆராய்ச்சி வல்லுநர் தொண்டுள்ளம்கொண்ட கரந்தை மேதகு சி கோவிந்தராசனார் அவர்களும், புறநானூற்று வீரத்திற்கு எடுத்துக்காட்டாக இருபதாம் நூற்றாண்டிலே மறக்குல மாண்பு பெற்றுயர்ந்து ஆயிரமாயிரம் மக்கள் வியத்தகு முறையிலே புதுமையான பொருளுரைகளும், அருளுரைகளும் வழங்கிய தெய்வீகத் திருமகனார் தேவர் நினைவுக்கல்லூரிப் பேராசிரியர் மேதகு கு. துரைராசு எம். ஏ. அவர்களும், திருவை

யாறு அரசர் கல்லூரிப்பேராசிரியர் மேதகு. வி. அ. அரங்க சாமி அவர்களும் ஆற்றிய சொற்பொழிவுகள் வரலாற்றுச் சிறப்புடையதாகுமன்றோ? அப்பெரியோர்களுக்கு நன்றியை உரித்தாக்குகின்றோம்.

தமிழ்ப் புலவர்களின் ஆய்வுரைகளைக் கேட்டுத் தமிழின்பம் கண்ட மக்களனைவரும் வாழ்க தமிழ்ச் சங்கம்! வளர்க தமிழ்த் தொண்டு! என்று மனம், மெய், மொழிகளால் வாழ்த்தினர் தென்னாடுய்யத் தோன்றிய சேதுகுலச் செம்மல் பாண்டித்துரைத் தேவரவர்களைப் பாராட்டும் முகத்தான் அணிசெய்யும் இத்தமிழ்பணிக்கு அருளுரைகள் வழங்கிய தமிழ்ச்சங்கக் காவலர் தூய நெஞ்சங்களுக்கும் ஆய்வுரைகள் வழங்கிய ஆட்சிக்குழு உறுப்பினர் நாகமணி அவர்களுக்கும்; அயராது உழைப்பினை ஈந்தும் வள்ளல் பாண்டித்துரைத்தேவர் திருமகனாரின் பொன்னடிபோற்றிப் புதுமணம் பரப்பிவரும் தமிழ்த் தொண்டன் ஆ. ஆண்டியப்பனார் அவர்களுக்கும் நன்றியலை உரித்தாக்குகின்றோம்.

உரியகாலத்திலே அரிய பணிகளைச் செய்து விழாவைச் சிறப்புவித்த தமிழ்ச்சங்கப் பணியாளர்களுக்கும், செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் பெருமக்களுக்கும் எதிர்காலப் புலவர் மாமணிகளாகத் திகழ இருககும் மாணவ மணிகளுக்கும் எமது உளங்கனிந்த நன்றி.

பல்வேறு வகையில் நல்லுரைகள் வழங்கிய பேராசிரியர் மேதகு. வி. சி. சீனிவாசன் அவர்களுக்கும், தமிழ் வளம்பொங்க நறும்பணி ஏற்று அருந்துணை புரிந்த வித்துவான் கி. பொன்னுராமன் அவர்களுக்கும் எமது நெஞ்சுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வாய்மணக்க, கேட்போரின் செவிமணக்க இன்முகம் காட்டி அரும்பணியாற்றிய இரட்டையராம், பண்பாட்டுக் காவலர்கள் மேதகு. வே. இராசமாணிக்கம், பூமாலை ஆகியோர்களது செயல்திறன் மறக்கற் பாலதன்று. அவர்களது சீரிய நேரிய தமிழ்ப்பணிக்கும்; உரிய காலத்திலே வநகைதந்து அணிசெய்து இருநாட்களும் பணியாற்றிய சகோதரச் சாரண்களுக்கும்; ஆக்கமும், ஊக்கமும் தந்துதவிய தமிழ்ச் சான்றோர்களின் நெஞ்சங்களுக்கும் எமது நெஞ்சு நெகிழ்ந்த நன்றி உரித்தாகுக.

அன்னைத் தமிழுக்கு அணிசெய்து பணிபுரிய துறை தோறும் தனித்தமிழின் நலம் பெருக, தொடர்ந்து அருந் துணைபுரிய அங்கயற்கண்ணம்மையை இறைஞ்சுவோமாக.

*தமிழ்மரபு காத்த தண்ணார் தமிழ்க் காவலன் வாழ்க!*

*தனித்தமிழால் உணர்வூட்டி தமிழ்வளம் நாட்டிய வள்ளல் பாண்டித்துரைத் தேவர் திருநாமம் வாழ்க! வளர்க! உயர்க!*

---

## நாகரும் தமிழரும்

நாகரென்ற பெருவலிபடைத்த வகுப்பினரும் இயக்கரென்ற வகுப்பினரும் தென்னாட்டில் வந்து இந்தத் தமிழரோடு கலந்ததாக வெளியாகின்றது முன்னவராகிய நாகர் பழங்காலத்தில் இப்பரதகண்டம் முழுதும் வியாபித்திருந்தமைபோடு இந்தியாவையடுத்துள்ள தீவுகள் பலவற்றிலும் பரவியிருந்ததாகப் பல நூல்களாலுமறியப்படுகின்றது.

நாகர், இயக்கர் என்னும் இவ்விரு பெருஞ்சாதியாருந்தமிழருடன் கலந்த காலம், ஆரியர் தமிழருடன் கலந்த காலத்திற்கு முற்பட்டதென்றே விளங்குகின்றது. கலைகளினும், அரசுத் தொழில், நெய்தற்றொழில் முதலிய பல தொழில்களினும் விருத்தியடைந்திருந்த நாகரென்னுஞ் சாதியாரது கலப்புத் தமிழரை மிகவும் மேன்மை பெறச் செய்தது. நாகர், இயக்கர் என்னுமிவ்விரு வகுப்பினரது வழக்கவொழுக்கங்கள் தமிழரிடத்துந் தமிழரது வழக்கவொழுக்கங்கள் அவ்வகுப்பினர் மாட்டுங் கலக்கக் காலா நேரத்தில் அவ்விரு வகுப்பினருந் தமிழருடன் ஒன்றுபடலாயினர்.

*தமிழ்ப்பழஞ்சரிதை*

பொ. பாண்டித்துரைத்தேவர்

(தொகுப்பு ஆ. ஆ.)

# நூல் மதிப்புரை

## நாவலர், பண்டித ந. மு. வேங்கடசாமிநாட்டார், தமிழ்ப் பேரவை வெள்ளிவிழா மலர்.

**தொகுப்பு: நாவலர் நாட்டார் தமிழ்ப் பேரவை. தஞ்சை-1.**

***விலை — உரூபா-4***

தண்டமிழ்க் கிழவர் மூவர் கோலோச்சிய பழம் பெரும் நாடாம் சோழவள நாட்டின் கண் சங்க காலமுதல் சால்பு பெற்ற பொன்னியின் வழிவந்து பிரிந்தோடும் குடமுருட்டி ஆற்றின் மருங்கில் அமைந்துள்ள சிறு கிராமம் நடுக்காவேரி!

புகழ்பெற்றது! தமிழ்பெற்றது! சால்புபெற்றது! ஏன்? நாட்டாரைப் பெற்றெடுத்த நல்வாய்ப்புப் பெற்று விட்டதால், நாடுள்ளவரை நந்தமிழ் ஏடுள்ளவரை புகழ்பெற்றுத்தான் ஆகும் நடுக்காவேரிக் கிராமம்,

அந் நடுக்காவேரியில் பெரும் புகழுடன் விளங்கிவந்த பழந்தமிழ்க்குடியில் ''நாட்டுக்குடையவரே நாட்டார்'' என்ற மரபினில் தோன்றியவர் நாவலர் ந. மு. வே. நாட்டாரவர்கள் என்பது நாடறிந்ததேயாம்.

இளமையில் திண்ணைப்பள்ளியிலே கல்வி பயின்று பின் உழவுத் தொழிலில் கடுமையாக உழைத்து வந்த நாட்டாரவர்களை கன்னித் தமிழ்த்தாய் கவன்றாள். ஆசிரியர் எவர் துணையுமின்றி தானாகவே கடுமையான நூற்கள் பல கற்றுணர்ந்து மூன்று ஆண்டுகளிலேயே பண்டிதத் தேர்வில் முதன்மையாகத் தேறினார். நான்காம் தமிழ்ச் சங்கம் வீற்றிருக்கும் மதுரையிலே சங்கம் நிறுவிய துங்கண் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள்பால் தங்கத்தோடா பரிசில் பெற்ற முதல் பண்டிதராவர்.

ஏட்டுக் கல்வி ஒன்றைமட்டுமே கற்றுணர்ந்து கல்லூரிகளிலும், பல்கலைக்கழகத்திலும் பணியாற்றி பெரும் புகழ் ஈட்டித்தந்த பேராசிரியர். நாவலர் பட்டம் பெற்ற அன்னார் 20 ஆம் நூற்றாண்டு உரையாசிரியர்களில் தலை

யாய இடத்தைப் பெற்றார்.

"சாம்போது தமிழ்மணந்து சாகவேண்டும்
உடம்பு வேகும்போது தமிழ்மணத்து வேகவேண்டும்"

என்ற குறிக்கோளுடன் வாழ்நாள் முழுவதும் வண்டமிழைப் பேணி வளர்த்த தண்டமிழ்க் காவலர் நாட்டாரவர்களின் திருநாமத்தின் பெயரால் நிறுவப்பெற்ற நாட்டார் தமிழ்ப் பேரவையின் வெள்ளிவிழாவின் போழ்து வெளியிடப்பட்டது இம்மலர்.

இலக்கண நிறைகடல் மேதகு. அ. கந்தசாமிப்பிள்ளை; நூலாய்வில் நுழைபுலம் பெற்ற ஔவை துரைச்சாமி பிள்ளை; கூர்த்தமதி கொண்ட சிங்காரவேல் சேதிராயர்; பாலகவி இராமநாதஞ் செட்டியார்; முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்; பெரும்புலவர். சரவணமுதலியார்; செந்தமிழ்ச்சுவையில் சிறந்தோங்கிய திருவாட்டி சிவபார்வதி அம்மையார்; நாவலரும், பாவலரும் வியந்து போற்றும் மூதறிஞர் ந. மு. கோவிந்தராய நாட்டார் ஆகியோரது எழுத்தோவியங்கள் அணி செய்கின்றன இம்மலரை. தமிழகத்திலே முதன் முதலாகத் தமிழ்ப் புலவர் ஒருவருக்கு எழுப்பப்பட்ட நினைவாலயமே குடமுருட்டி ஆற்றின் கரையிலே காட்சியளிக்கும் கற்கோவில். ஆங்கு ஆண்டு தோறும் நடைபெறும் தமிழ்ப் பேரவையில் பூத்ததுதான் இவ்வரிய மலர். செந்தமிழ் நடையில் மிகச் சுவையுள்ளதாக அமைந்துள்ளது. 1970 என்று அட்டையில் காணப்பட்டாலும் 1973-ம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் வெளியிடப்பட்டதாகும்.

வாழ்க நாட்டார் புகழ்! வெல்க அவர்தம் தமிழ்ப் பணிகள்!

பதிப்பாசிரியர்
ஆ. ஆண்டியப்பன்

# மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

---

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய நுழைவு, இளம்புலவர் புலவர் தேர்வு முடிவுகள் பின்வருமாறு:

## புலவர் நுழைவு

*முதல் வகுப்பு:*

491

*இரண்டாம் வகுப்பு:*

239 240–243 269 271 275 280 297 304 305 309 317 319–321 324 328–330 334 339–342 344 347 352 — 354 363 366–368 372 383–386 388 405 406 417 418 424 430 437 454 455 457 460 466 482 495 501 544

*மூன்றும் வகுப்பு:*

238 244 245 247–250 252 253 256–259 261 262 265 268 270 272 274 276–279 281 282 285 287—289 291–294 296 299–301 303 307 308 310–316 318 323 325–327 331–333 336–338 343 345 349 350 356—360 362 364 365 369 370 373–375 377–380 387 389—394 400 402–404 407 408 411 415 416 423 425 428 432 436 438 439 443 452 453 458 461–464 469 476 477 485 488 489 493 494 507 511 514 515 521 529 532 542 543 546 553 564 565

## இளம்புலவர்

முதல் வகுப்பு:

*1440 1445 1463 2229 2242 2259 2266*

இரண்டாம் வகுப்பு:

*1435 37 38 41 44 47 65 67 69 73 95 1506 07 12 13 19 22 24 25 49 56 57 66 68 69 73 78 80 95 96 1622 39 41 43 44 50 1704 37 1806 11 34 54 61 1974 2040 56 76 87-89 2101 10 11 28 96 2200 05 09 10 35 36 60 69 94 2302 08 37-39 42 69 2408 19 30 75 76 82.*

மூன்றும் வகுப்பு:

1434 39 42 43 46 48-51 55 57 58 62 64 66 68 70 71 74 77 79 80 82-85 87 88 90 92-94 96-98 1501 02 04 05 08-11 14 16-18 20 21 23 26-28 30 32-43 48 50-54 58-65 67 70-72 74-77 79 81-84 87 89-94 97-99 1601-03 06-10 12 14-21 23-27 29 31-38 42 45-49 53 54 56-58 61 63 64 66-74 81 82 84-88 91-95 1698—1703 05-10 12 14-28 31 33-36 38-42 44-46 49 50 54 55 57-59 62 68 70-73 78 83-89 91-1802 04 05 07-09 12-16 18 19 22-26 28-33 35-41 44 48-50 52 53 55-58 60 62 63 65 66 68 72 74-83 85-87 91-94 96 97 1900 02-04 07 10-12 14-16 18 23 24 28 33 43 50 54 61 62 65-67 71 73 75 77-88 92-94 96 98 2002 07 08 11 17 18 25 26 31 32 37 39 41 42 45-53 55 59-68 70 71 77 78 80-85 90 91 96-98 2100 03-09 12 15-20 22 24 27 29 36 38 39 41 44-46 49 51 56 63 66 71 73 82 84 86 87 90 93 94 97 2203 04 06-08 11-13 15 17 19 24 28 30-32 37 38 41 45 46 49 51 52 56 57 64 65 68 72 76 79 82-85 95 98 99 2304 06 07 09 10 15 17 21 23 27 28 31 32 34-36 40 41 43 46 48 49 52 53 58 60-62 65-67 72 75 78 83 85-88 91-97 2400 04-06 12-15 18 20 21 25-27 31 32 34 34எ 36 41 45-50 55 64-66 68-74 77 79 81 83-86 88-98 2500-05 07 08.

# புலவர்

முதல் வகுப்பு:

இல்லை

இரண்டாம் வகுப்பு:

2186 87 2215 68 94 2346 63 83 2417 29 2554 2667 69 76 77 83 85 87 2752 56 92 95 2806 42 51 55 85 91 99 2919 22 23 27.

மூன்றும் வகுப்பு:

2177-82 88 90-94 97 2200 03 05 11 16 17 20-22 24—31 33 36-40 42 46 48 50-52 54-57 59-67 69-71 73 75-79 81 85 91-93 99 2303 05-07 10-12 22 24-26 29 33-35 37 44 45 47-49 51 53 57-59 61 62 66 72-74 78 79 84-90 92 93 95 97 2407 12 13 16 19-21 23-28 30-37 42-45 47-55 58 59 63 67 69 71 75-78 81 94 96 98-2501 04 09-11 13-16 19 20 23-31 33 35 36 37 46 51-53 55 56 58 60 63-67 70 72 75 77 79-81 87 89-94 96-2600 02-04 07 08 12-16 18-25 28 30-33 35 42 43 45 46 50-52 54 56—58 61—63 66 70-75 78—82 84 86 88-2702 04-06 08 10-12 14 19 21 22 25 27-30 32 33 35-37 39-47 49 51 53-55 61 62 66 69 72 74-81 83 87-91 93 94 97-2802 04 07 11 12 14-17 19-22 24-26 28-31 37 41 45 46 49 50 52-54 56-64 66 70 74 76 78 79 82-84 87-90 92-94 96-98 2901 03 05 06 09 13 14 18 20 21 24-26 28 29 32-38.

# தமிழ் ஆராய்ச்சிப் பேரவை

## கோவை.

24--6—73 ஆம்நாள் சின்னவேடன்பட்டி இராமானந்த அடிகள் உயர்பள்ளித் தலைமை ஆசிரியர் உயர்திரு வே தட்சிணாமூர்த்தி பி. ஏ. பி. டி அவர்கள் தலைமையில் அமைப்புக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

பழந்தமிழ் இலக்கிய ஆராய்ச்சி செய்வதையே நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட இப் பேரவைக்குத் தலைவராக திரு. வே. தட்சிணாமூர்த்தி அவர்களும், செயலாளராக புலவர். திரு. க. இளங்கோ அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

"தண்டமிழ்ச் சங்கந் தன்னைமுன் னிறீஇ
பண்டுபல் புலவரை வம்மென வேற்றுக்
கொண்டுநன் றூற்றுங் குணப்பெருங் குன்றே
வேண்டிற் றெவர்க்கும் விரைந்தினி துதவும்
பாண்டித் துரையெனும் பாவலர் கோவே!"

(எம். கே. எம். அ.)